# சேலம் மாநகராட்சி

## 2007–2008ம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கை

அன்புடையீர், வணக்கம்.

சேலம் மாநகராட்சியின் 2007–2008ம் ஆண்டின் நிதி நிலை அறிக்கைக்கான மாமன்றக் கூட்டத்திற்கு வருகை தந்துள்ள அனைத்து மன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர், மாநகராட்சி அலுவலர்கள், பத்திரிக்கையாளர்கள் மற்றும் தொலைக்காட்சியினர் ஆகிய அனைவரையும்

**“முகத்தான் அமர்ந்தினிது நோக்கி அகத்தானாம்**
**இன்சொ லினதே அறம்”**

முகம் மலர நோக்கி அகம் மலர இனிய சொற்களைக் கூறுவதே அறவழியில் அமைந்த பண்பாகும் என்னும் திருவள்ளுவர் வாக்கின்படி அன்புடன் வணஙகி வரவேற்கிறேன்.

கடந்த 2006ம் ஆண்டு உள்ளாட்சி தேர்தலில் சேலம் மாநகராட்சியின் மேயர் பதவியை தாழ்த்தப்பட்ட இனத்தைச் சார்ந்த பெண் மன்ற உறுப்பினருக்கு ஒதுக்கீடு செய்து சேலம் மாநகராட்சியின் முதல் பெண் மேயர் என்ற பெருமையை எனக்கு அளித்து சேலம் மாநகர மக்களுக்கு சேவை செய்யும் அரிய வாய்ப்பினைப் பாசத்துடன் வழஙகிய

**“முத்தமிழறிஞர்”, “செம்மொழிக் காவலர்”,**
**“பாரதியார் தமிழ்ச் செம்மல்”, “தமிழினத் தலைவர்”**
**மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும்,**

உள்ளாட்சியில் நல்லாட்சி நடத்தி சாதனைகள் புரியும் தளபதி

**மாண்புமிகு தமிழக உள்ளாட்சித் துறை அமைச்சர்**
**திரு மு.க. ஸ்டாலின் அவர்களுக்கும்,**

சேலம் மாவட்டத்தில், குறிப்பாக சேலம் மாநகரத்தின்
வளர்ச்சிக்காக அல்லும் பகலும் உழைத்து வரும்

**மாண்புமிகு தமிழக வேளாண்மைத் துறை அமைச்சர்**

**வீரபாண்டி திரு எஸ். ஆறுமுகம் அவர்களுக்கும்,**

எனது பணிவான வணக்கத்தையும்,

**“செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்**

**வானகமும் ஆற்றல் அரிது”**

எனும் வள்ளுவரின் திருவாக்கின்படி எனது உளங்கனிந்த நன்றியினையும் பணிவுடன் தெரிவித்து சேலம் மாநகராட்சியின் 2007–2008ம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையை இந்த மாமன்றத்தின் முன் எனது முதலாவது நிதி நிலை அறிக்கையாக மகிழ்ச்சியுடன் சமர்ப்பிக்கின்றேன்.

## சேலம் மாநகராட்சி

## 2007–2008ம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கை

1866ம் ஆண்டு துவஙகி சிறப்பான நகர்ப்புற உள்ளாட்சியாகச் செயல்பட்டு வந்த சேலம் நகராட்சி 1.6.1994 முதல் மாநகராட்சியாக நிலை உயர்த்தப்பட்டது.

சேலம் மாநகரத்தின் மொத்த பரப்பளவு 91.34 ச.கி.மீ. ஆகும். இதனை 60 கோட்டஙகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. பரவலாக்கப்பட்ட நிர்வாகத்திற்காக நான்கு வார்டு அலுவலகஙகள் உருவாக்கப்பட்டுள்ளன. சேலம் மாநகரத்தின் மொத்த மக்கள் தொகை 2001ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 6,96,760 ஆகவும், இடைக்கால மதிப்பீட்டின்படி நடப்பாண்டில் 7,74,074 ஆகவும் உள்ளது.

சேலம் மாநகராட்சி சட்டம், 1994ல் அரசினரால் மேற்கொள்ளப்பட்ட திருத்தஙகளின்படி சேலம் மாநகராட்சியின் வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் 2006ஆம் ஆண்டு நடைபெற்ற நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்ட 60 கோட்டஙகளின் மன்ற உறுப்பினர்களால் மறைமுகத் தேர்தல் வழி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். நடப்பு பதவி காலத்தில் மேயர் பதவிக்கான இடஒதுக்கீடு தாழ்த்தப்பட்ட வகுப்பினர் (பெண்கள்) பிரிவைச் சேர்ந்த மன்ற உறுப்பினருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மொத்தமுள்ள 60 கோட்ட மன்ற உறுப்பினர்களில் கீழ்க்கண்டவாறு இடஒதுக்கீடு செய்து அதன் அடிப்படையில் 13.10.2006ம் தேதியில் நகர்ப்புற உள்ளாட்சி சாதாரணத் தேர்தல் நடத்தப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| 1. | தாழ்த்தப்பட்ட வகுப்பினர் (பொது) | – | 4 |
| 2. | தாழ்த்தப்பட்ட வகுப்பினர் (பெண்கள்) | – | 3 |
| 3. | பழஙகுடியினர் (பொது) | – | இல்லை |
| 4. | பழஙகுடியினர் (பெண்கள்) | – | இல்லை |
| 5. | பெண்கள் (பொது) | – | 17 |
| 6. | பொது | – | 36 |
| | மொத்தம் | | 60 |

சேலம் மாநகராட்சியின் 2006–2007ம் ஆண்டிற்கான திருத்திய நிதி நிலை அறிக்கையினையும், 2007–2008ம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையினையும் இம்மன்றத்தின் முன் மகிழ்வுடன் சமர்ப்பிக்கின்றேன்.

இந்த நிதி நிலை அறிக்கையானது சேலம் மாநகராட்சியில் தற்போதுள்ள நிலவரப்படியான மாநகராட்சியின் சொந்த நிதி ஆதாரங்கள், அவற்றில் எதிர்பார்க்கப்படும் மேம்பாடுகள், இந்திய அரசு மற்றும் தமிழ்நாடு அரசு வழங்கியுள்ள மற்றும் வழங்கவிருக்கின்ற நிதி ஆதாரங்கள் மற்றும் மைய, மாநில அரசுகளின் கட்டுப்பாட்டில் செயல்படும் நிதி நிறுவனங்கள் மூலமாக பெறவிருக்கும் நிதி ஆதாரங்கள் ஆகியவற்றை உங்களுடன் மகிழ்வோடு பகிர்ந்துக் கொள்கிறேன்.

‘கருணை’யோடு இந்த ‘நிதி’ ஆதாரங்களை வழங்கவும், இம்மாநகராட்சியை தமிழகத்தின் தலைசிறந்த மாநகராட்சியாக உருவாக்கவும் தாயுள்ளத்தோடு வழிகாட்டி செயல்படும்

**மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களையும்,**

**மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்**

**திரு. மு.க. ஸ்டாலின் அவர்களையும்,**

இந்த நிதி ஆதாரங்களை பெறுவதற்கு முதல் காரணமாக திகழும்

**மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களையும்,**

நன்றியோடு நினைவு கூர்கிறேன்.

மாநகர மக்களின் நலன் கருதி அடிப்படை வசதிகளை மேம்படுத்த நடைபெற்று வரும் திட்டப் பணிகள், நடைபெறவுள்ள திட்டப் பணிகள், உத்தேசிக்கப்படும் திட்டங்கள் இவற்றிற்கான மாநகராட்சியின் நிதிப் பொறுப்புகள், அரசு மற்றும் நிதி நிறுவனங்களின் பங்களிப்பு ஆகியவற்றையும் மன்றத்தின் முன் அன்புடன் சமர்ப்பிக்கின்றேன்.

கடந்த காலத்தில் மாநகர மக்களின் எட்டாக் கனவாக இருந்த பல்வேறு திட்டங்கள் **நமது பாசத்திற்குரிய தலைவர் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின்** அரும் பெரும் முயற்சியால் நனவாகி வரும் விவரங்களை உங்களுடன் பெருமகிழ்ச்சியுடன் பகிர்ந்து கொள்கிறேன்.

சேலம் மாநகராட்சி

**நிதி நிலை விவரம்**

**2006–2007ம் ஆண்டிற்கான திருத்திய வரவு செலவு திட்டம்**

**வருவாய் கணக்கு**

| **வ. எண்** | **விபரம்** | **வரவுகள் (ரூபாய் லட்சத்தில்)** | **வ. எண்** | **விபரம்** | **செலவுகள் (ரூபாய் லட்சத்தில்)** |
|---|---|---|---|---|---|
| 1. | சொத்து வரி | 1,700.00 | 1. | மொத்த நிர்வாகச் செலவு | 2,655.05 |
| 2. | தொழில் வரி | 125.50 | 2. | பொது நிர்வாகப் பணிகள் | 1815.00 |
| 3. | கேளிக்கை வரி | 121.50 | 3. | குடிநீர் பராமரிப்பு | 1,710.00 |
| 4. | முத்திரைக் கட்டணம் | 713.10 | 4. | தெரு விளக்கு பராமரிப்பு | 410.00 |
| 5. | சொத்துக்கள் மூலம் வரவு | 526.35 | 5. | பொது சுகாதாரம் & மலேரியா | 265.00 |
| 6. | குடிநீர் விநியோக வரவு | 1,570.00 | 6. | கல்வி | 105.00 |
| 7. | கட்டணங்கள் மூலம் வரவு | 300.00 | 7. | வாகனங்கள் பராமரிப்பு | 350.00 |
| 8. | அரசு நிதி உதவி மற்றும் மானியம் | 2,425.60 | 8. | கட்டிடங்கள் மற்றும் சாலை பராமரிப்பு | 265.00 |
| 9. | இதர வரவுகள் | 150.00 | 9. | இதர செலவினம் | 57.00 |
| | **மொத்த வரவினம்** | **7,632.05** | | **மொத்த செலவினம்** | **7,632.05** |

**மூலதனக் கணக்கு**

| **வ. எண்** | **விபரம்** | **வரவுகள் (ரூபாய் லட்சத்தில்)** | **வ. எண்** | **விபரம்** | **செலவுகள் (ரூபாய் லட்சத்தில்)** |
|---|---|---|---|---|---|
| 1. | கிராம தன்னிறைவுத் திட்ட மானியம் | 30.92 | 1. | பொது பணிகள் | 730.24 |
| 2. | சட்டமன்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் மானியம் | 139.40 | 2. | திட்டப் பணிகள் | 3,049.49 |
| 3. | திடக்கழிவு மேலாண்மை | 1,000.00 | 3. | கல்வி | 50.00 |
| 4. | வாம்பே கழிப்பிடம் | 18.08 | 4. | குடிநீர் வினியோகம் | 700.00 |
| 5. | முன் பணம் | 98.66 | 5. | தெரு விளக்குகள் | 110.00 |
| 6. | வைப்புத் தொகை | 119.06 | 6. | கடன்கள் திருப்பிச் செலுத்துதல் | 400.00 |
| 7. | வெள்ள நிவாரணம் | 100.00 | 7. | முன் பணம் | 96.10 |
| 8. | மாநில நிதிக் குழு மானியம் | 471.04 | 8. | வைப்புத் தொகை | 126.98 |
| 9. | சிறப்பு சாலை அபிவிருத்தி மானியம் மற்றும் கடன் | 2,800.00 | 9. | தேசிய குடிசை அபிவிருத்தித் திட்டம் | 340.00 |
| 10. | மழைநீர் சேகரிப்பு மானியம் | 114.16 | 10. | வாம்பே கழிப்பிடம் | 18.28 |
| 11. | குடிநீர் பராமரிப்பு கடன் & மானியம் | 700.00 | 11. | மழைநீர் சேகரிப்பு | 114.16 |
| 12. | போக்குவரத்து அபிவிருத்தி மானியம் | 9.00 | 12. | உள்ளாட்சித் தேர்தல் நிதி | 35.00 |
| 13. | ஆடு அடிக்கும் தொட்டி மற்றும் மின் தகன மேடை அமைக்கும் மானியம் | 12.70 | | | |
| 14. | மாவட்ட ஆட்சித் தலைவரிடம் பெறப்பட்ட வளர்ச்சி நிதி | 76.56 | | | |
| 15. | அடிப்படை வசதிகள் | 51.61 | | | |
| 16. | உள்ளாட்சித் தேர்தல் நிதி | 29.06 | | | |
| | **மொத்தம்** | **5,770.25** | | **மொத்தம்** | **5,770.25** |
| | **ஆக மொத்தம் வரவு = ரூ. 13,402.30 லட்சங்கள்**<br>**ஆக மொத்தம் செலவு = ரூ. 13,402.30 லட்சங்கள்** | | | | |

# சேலம் மாநகராட்சி

## 2007–2008ம் ஆண்டின் வரவு செலவு மதிப்பீடு

### வருவாய் கணக்கு

| வ. எண் | விபரம் | வரவுகள் (ரூபாய் லட்சத்தில்) | வ. எண் | விபரம் | செலவுகள் (ரூபாய் லட்சத்தில்) |
|---|---|---|---|---|---|
| 1. | சொத்து வரி | 1,800.00 | 1. | மொத்த நிர்வாகச் செலவு | 2,929.00 |
| 2. | தொழில் வரி | 175.00 | 2. | பொது நிர்வாகப் பணிகள் | 2,500.00 |
| 3. | கேளிக்கை வரி | 130.00 | 3. | குடிநீர் பராமரிப்பு | 2,000.00 |
| 4. | முத்திரைக்கட்டணம் | 780.00 | 4. | தெரு விளக்கு பராமரிப்பு | 460.00 |
| 5. | சொத்துக்கள் மூலம் வரவு | 575.00 | 5. | பொது சுகாதாரம் மற்றும் மலேரியா | 500.00 |
| 6. | குடிநீர் விநியோக வரவு | 1,600.00 | 6. | கல்வி | 110.00 |
| 7. | கட்டணங்கள் மூலம் வரவு | 500.00 | 7. | வாகனங்கள் பராமரிப்பு | 365.00 |
| 8. | அரசு நிதி உதவி மற்றும் மானியம் | 4,240.00 | 8. | கட்டிடங்கள் மற்றும் சாலை பராமரிப்பு | 300.00 |
| 9. | இதர வரவுகள் | 200.00 | 9. | இதர செலவினம் | 90.00 |
| | **மொத்த வரவினம்** | **10,000.00** | | **மொத்த செலவினம்** | **9,254.00** |

### மூலதனக் கணக்கு

| வ. எண் | விபரம் | வரவுகள் (ரூபாய் லட்சத்தில்) | வ. எண் | விபரம் | செலவுகள் (ரூபாய் லட்சத்தில்) |
|---|---|---|---|---|---|
| 1. | நமக்கு நாமே திட்டம் | 50.00 | 1. | பொது பணிகள் | 850.00 |
| 2. | சட்டமன்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் மானியம் | 100.00 | 2. | திட்டப் பணிகள் | 1,700.00 |
| 3. | வெள்ள நிவாரணம் | 100.00 | 3. | குடிநீர் வழஙகல் திட்டம் | 1,000.00 |
| 4. | வாம்பே திட்டம் | 19.00 | 4. | மழைநீர் சேமிப்பு பணிகள் | 115.00 |
| 5. | முன் பணம் | 100.00 | 5. | வாம்பே கழிப்பிடம் | 40.00 |
| 6. | வைப்புத் தொகை | 150.00 | 6. | தெரு விளக்குகள் | 120.00 |
| 7. | சிறப்பு சாலைக் கடன் மற்றும் மானியம் | 1,200.00 | 7. | கல்வி | 109.00 |
| 8. | மழைநீர் சேமிப்பு மானியம் | 115.00 | 8. | கடன் திருப்பிச் செலுத்துதல் | 800.00 |
| 9. | குடிநீர் வினியோகம் | 1,000.00 | 9. | நவீன இறைச்சிக் கூடம் | 20.00 |
| 10. | திடக்கழிவு மேலாண்மை | 1,000.00 | 10. | மருத்துவமனை அபிவிருத்தி & உபகரணஙகள் வாஙகுதல் | 120.00 |
| 11. | சோலார் ஆவி விளக்கு | 18.00 | 11. | முன்பணம் | 100.00 |
| 12. | போக்குவரத்து அபிவிருத்தி | 10.00 | 12. | வைப்புத் தொகை | 140.00 |
| 13. | மாவட்ட ஆட்சித் தலைவர் வளர்ச்சி பணி ஊக்க நிதி | 44.00 | 13. | திருமணி முத்தாறு திட்டம் | 3,200.00 |
| 14. | திருமணி முத்தாறு திட்டம் 2 | 3150.00 | 14. | பாதாள சாக்கடைத் திட்டம் | 14,000.39 |
| 15. | பாதாள சாக்கடைத் திட்டம் | 14,900.39 | 15. | தனிக் குடிநீர் திட்டம் | 17,800.00 |
| 16. | தனிக் குடிநீர் திட்டம் | 17,800.00 | 16. | இடுகாடு, சுடுகாடு தகன மேடை | 100.00 |
| 17. | நவீன இறைச்சிக் கூடம் | 20.00 | 17. | ஐ.எச்.எஸ்.டி.பி. (IHSDP) | 19,976.30 |
| 18. | இடுகாடு அபிவிருத்தி மற்றும் மின்சார தகன மேடை மானியம் | 60.00 | 18. | வெள்ள நிவாரணம் | 100.00 |
| 19. | ஐ.எச்.எஸ்.டி.பி. (IHSDP) | 19,976.30 | 19. | திடக்கழிவு மேலாண்மை | 750.00 |
| 20. | யு.ஐ.டி.எஸ்.எஸ்.எம்.டி. (UIDSSMT) | 2,400.00 | 20. | யு.ஐ.டி.எஸ்.எஸ்.எம்.டி. (UIDSSMT) | 2,400.00 |
| | | | | | |
| | **மொத்தம்** | **62,212.69** | | **மொத்தம்** | **63,440.69** |
| | **ஆக மொத்தம்** | **72,212.69** | | **ஆக மொத்தம்** | **72,694.69** |
| | | | | **பற்றாக்குறை** | **482.00** |

நமது மாநகராட்சியின் நிதி நிலை விவரஙகள் பின்வருமாறு :

## 2006 – 2007 ஆம் ஆண்டுக்கான திருத்திய நிதி நிலை

### வருவாய் கணக்கு

| | | |
|---|---|---|
| மொத்த வரவினம் | – | ரூ. 7,632.05 லட்சம் |
| மொத்தச் செலவினம் | – | ரூ. 7,632.05 லட்சம் |

### மூலதனக் கணக்கு

| | | |
|---|---|---|
| மொத்த வரவினம் | – | ரூ. 5,770.25 லட்சம் |
| மொத்தச் செலவினம் | – | ரூ. 5,770.25 லட்சம் |

### மொத்தம்

| | | |
|---|---|---|
| ஆக மொத்த வரவு | – | ரூ. 13,402.30 லட்சம் |
| ஆக மொத்தச் செலவு | – | ரூ. 13,402.30 லட்சம் |

2006 – 2007ஆம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்ட பற்றாக்குறை ரூ. 459.54 லட்சம் மாநகராட்சியின் வருவாய் மற்றும் அரசு நிதியுதவிகள் வாயிலாகவும், சிக்கன நடவடிக்கையாலும் நேர் செய்யப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 2007 – 2008 ஆம் ஆண்டுக்கான நிதி நிலை

**வருவாய்க் கணக்கு**

| | | |
|---|---|---|
| மொத்த வரவினம் | – | ரூ. 10,000.00 லட்சம் |
| மொத்தச் செலவினம் | – | ரூ. 9,254.00 லட்சம் |

**மூலதனக் கணக்கு**

| | | |
|---|---|---|
| மொத்த வரவினம் | – | ரூ. 62,212.69 லட்சம் |
| மொத்தச் செலவினம் | – | ரூ. 63,440.69 லட்சம் |

**மொத்தம்**

| | | |
|---|---|---|
| ஆக மொத்த வரவு | – | ரூ. 72,212.69 லட்சம் |
| ஆக மொத்தச் செலவு | – | ரூ. 72,694.69 லட்சம் |
| பற்றாக்குறை | – | ரூ. 482.00 லட்சம் |

இந்நிதி நிலை அறிக்கையில் ஏற்படும் பற்றாக்குறையை சேலம் மாநகராட்சியின் வருவாயை மேம்படுத்தியும், அரசு நிதியுதவியை அதிகமாகப் பெற்றும் நேர் செய்ய வாய்ப்புள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## வருவாய்த் தலைப்பு

### வரியினஙகள்

### சொத்துவரி

| | | |
|---|---|---|
| மொத்த வரி விதிப்புகள் | – | 1,58,000 |
| டிசம்பர்’2006 முடிய வசூல் | – | ரூ 794.87 லட்சம் |
| 2006–2007 க்கு எதிர்பார்க்கப்படும் வசூல் | – | ரூ. 1,700.00 லட்சம் |
| 2007–2008 க்கு உத்தேசிக்கப்பட்டுள்ள வசூல் | – | ரூ. 1,800.00 லட்சம் |

நடப்பாண்டில் இதுவரை 3,798 வரிவிதிப்புகள் கூடுதலாக விதிக்கப்பட்டு வருவாய் மேம்படுத்தப்பட்டுள்ளது.

### தொழில் வரி

| | | |
|---|---|---|
| மொத்த வரி விதிப்புகள் | – | 18,565 |
| டிசம்பர்’2006 முடிய வசூல் | – | ரூ 69.15 லட்சம் |
| 2006–2007க்கு எதிர்பார்க்கப்படும் வசூல் | – | ரூ. 125.50 லட்சம் |
| 2007–2008க்கு உத்தேசிக்கப்பட்டுள்ள வசூல் | – | ரூ. 175.00 லட்சம் |

### கேளிக்கை வரி

| | | |
|---|---|---|
| 2006–2007 ம் ஆண்டிற்கு வரப்பெற்றது | – | ரூ. 121.51 லட்சம் |
| 2007–2008ம் ஆண்டிற்கு எதிர்பார்க்கப்படும் வரவு | – | ரூ. 130.00 லட்சம் |

கேளிக்கை வரி வருவாயில் குறைவு ஏற்படும் என்றாலும் இதனை ஈடுகட்ட அரசு மானியம் வழஙகப்பட உள்ளதால் இந்த இனத்தில் எதிர்பார்க்கப்படும் அளவிற்கு வருவாய் வர வாய்ப்புள்ளது.

## வரியில்லா இனங்கள்

### முத்திரைத்தாள் கட்டணம்

| | | |
|---|---|---|
| 2006 – 07ம் ஆண்டிற்கு வரவு | – | ரூ. 713.10 லட்சம் |
| 2007 – 08ம் ஆண்டிற்கு எதிர்பார்க்கப்படும் வரவு | – | ரூ. 780.00 லட்சம் |

### குடிநீர்க்  கட்டண வரவு

| | | |
|---|---|---|
| மொத்தக் குடிநீர் இணைப்புகள் | – | 71,568 |
| டிசம்பர்'2006 முடிய வசூல் | – | ரூ  816.77 லட்சம் |
| 2006–2007க்கு எதிர்பார்க்கப்படும் வருவாய் | – | ரூ.1,570.00 லட்சம் |
| 2007–2008க்கு உத்தேசிக்கப்பட்டுள்ள வருவாய் | – | ரூ.1,600.00 லட்சம் |

குடிநீர் விநியோகத்தின் கீழ் கட்டணமாகப் பெறப்படும் வருவாயானது இத்தலைப்பின்கீழ் மேற்கொள்ளப்படும் செலவுகள் மற்றும் 1997 முதல் 2001 வரை உள்ள நிலுவைத் தொகைக்கு குடிநீர் வடிகால் வாரியத்திற்குச் செலுத்த வேண்டிய தவணைத் தொகை ஆகியவற்றுடன் ஒப்பிடும்போது மிகவும் குறைவு ஆகும். மேலும் குடிநீருக்காக சேலம் மாநகராட்சியால் குடிநீர் வாரியத்திற்கும், மின் வாரியத்திற்கும் செலுத்த வேண்டிய தொகை ஆண்டிற்கு ஆண்டு உயர்ந்து கொண்டே வருகிறது. இப்பற்றாக்குறையை ஈடுகட்ட பொது நிதியிலிருந்து இதற்காகப் பெரும் பகுதி செலவிடப்படுகிறது.

### சொத்துக்கள் மூலம் வரவு

### அ. கடைகள்

| | | |
|---|---|---|
| 2006–2007ம் ஆண்டிற்கான எதிர்பார்க்கப்படும் வருவாய் | – | ரூ. 208.95 லட்சம் |
| 2007–2008ம் ஆண்டிற்கு உத்தேசிக்கப்படும் வருவாய் | – | ரூ. 250.00 லட்சம் |

மாநகராட்சிக்குச் சொந்தமான கடைகள் முதலிய இனங்களை குத்தகைக்கு விடுவதன் மூலமும் குத்தகையை சந்தை மதிப்பு அடிப்படையில் குறைந்த பட்சம் 15 % என

மூன்றாண்டுகளுக்கு ஒரு முறை உயர்த்துவதன் வாயிலாகவும் ஆண்டுக்கு ஆண்டு கூடுதலாக வருவாய் ஈட்டப்படுகிறது.

**ஆ. <u>குத்தகை இனஙகள்</u>**

ஆண்டு உரிமையாணை இனஙகள் மூலம்

2006–2007ம் ஆண்டிற்கு எதிர்பார்க்கப்படும் வருவாய் – ரூ. 317.40 லட்சம்

2007–2008ம் ஆண்டிற்கு உத்தேசிக்கப்படும் வருவாய் – ரூ. 325.00 லட்சம்

**<u>கட்டணஙகள் மூலம் வருவாய்</u>**

2006 – 2007ம் ஆண்டிற்கான வருவாய் – ரூ. 300.00 லட்சம்

2007 – 2008ம் ஆண்டிற்கான வருவாய் – ரூ. 500.00 லட்சம்

**<u>அரசு நிதி உதவி மற்றும் மானியம்</u>**

2006 – 2007ம் ஆண்டுக்கு எதிர்பார்க்கப்படும் வருவாய் – ரூ. 2,425.60 லட்சம்

2007 – 2008ம் ஆண்டுக்கு உத்தேசிக்கப்படும் வருவாய் – ரூ. 4,240.00 லட்சம்

**<u>இதர வருவாய்</u>**

2006 – 2007ம் ஆண்டுக்கு எதிர்பார்க்கப்படும் வருவாய் – ரூ. 150.00 லட்சம்

2007 – 2008ம் ஆண்டிற்கு உத்தேசிக்கப்படும் வருவாய் – ரூ. 200.00 லட்சம்

## வருவாய்த் தலைப்பு

### செலவினங்கள்

இத்தலைப்பின் கீழ் பொது நிர்வாகச் செலவு, பொது நிர்வாக பணிகள், குடிநீர் வழங்கல், தெரு விளக்கு, நல வாழ்வு, துப்புரவு, மலேரியா எதிர்ப்பு, கல்வி, வாகனங்கள் பராமரிப்பு, கட்டிடங்கள், சாலை, வடிகால், தெருவிளக்கு பராமரிப்புச் செலவினங்கள், கடன் திரும்பச் செலுத்துதல் மற்றும் இதர செலவினங்கள் அடங்கியுள்ளன.

2006 – 2007ம் ஆண்டிற்கான திருத்திய மொத்தச் செலவுகள் – ரூ. 7,632.05 லட்சம்

2007 – 2008ம் ஆண்டிற்கு உத்தேசிக்கப்படும் மொத்த செலவுகள் – ரூ. 9,254.00 லட்சம்

## மூலதனக் கணக்கு

### செலவினங்கள்

இத்தலைப்பின் கீழ், பொதுப் பணிகள், திட்டப்பணிகள், குடிநீர் வழங்கல் திட்டம், மழைநீர் சேமிப்பு பணிகள், கல்வி, வாம்பே கழிப்பிடம், தெரு விளக்கு, கடன் திருப்பிச் செலுத்துதல், நவீன இறைச்சி கூடங்கள், மருத்துவமனைஅபிவிருத்தி மற்றும் உபகரணங்கள் வாஙகுதல், முன்பணம், வைப்புத் தொகை, திருமணி முத்தாறு திட்டம், பாதாள சாக்கடைத் திட்டம், தனிக் குடிநீர் திட்டம், இடுகாடு, சுடுகாடு அபிவிருத்தி, தகன மேடை, வெள்ள நிவாரணம், திடக்கழிவு மேலாண்மை, IHSDP திட்டம் மற்றும் UIDSSMT திட்டம் முதலிய இனஙகளில் மேற்கொள்ளப்படும் செலவினங்கள் அடஙகியுள்ளன.

2006 – 2007ம் ஆண்டிற்கான திருத்திய மொத்த செலவுகள் – ரூ. 5,770.25 லட்சம்

2007 – 2008ம் ஆண்டிற்கு எதிர்பார்க்கப்படும் மொத்த செலவுகள் – ரூ. 63,440.69 லட்சம்

## பொறியியல் மற்றும் குடிநீர் வழங்கல் துறை

### குடிநீர் வழங்கல்

சேலம் மாநகராட்சி 1994ம் ஆண்டு மாநகராட்சியாக நிலை உயர்த்தப்பட்டது. நகராட்சியாக இருந்தபோது சேலம் நகரத்தின் மக்கள் தொகை 3,66,712 ஆகும். மாநகராட்சியாக உயர்த்தப்பட்டபோது மக்கள் தொகை 5,79,750 ஆக உயர்ந்தது. சேலம் நகராட்சியாக இருந்தபோது கீழ்காணும் இரண்டு குடிநீர்த் திட்டங்கள் செயல்பாட்டில் இருந்தன.

1. சேலம் நகராட்சியின் சொந்த குடிநீர் திட்டம்.
2. மேட்டூர் – ஆத்தூர் கூட்டுக் குடிநீர் திட்டம்.

மேற்படி இரண்டு குடிநீர் திட்டங்கள் மட்டுமே தற்போதும் மாநகராட்சியில் செயல்பட்டு வருகிறது.

இந்த இரண்டு திட்டங்களின் மூலம் 68.00 மில்லியன் லிட்டர் குடிநீர் தினமும் பெறப்பட்டு மாநகரின் 2001ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கீட்டின்படியான 6,93,636 நபர்களுக்கு நாள் ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கு 87 லிட்டர் வீதம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

இத்திட்டங்கள் இரண்டும் நகராட்சியாக இருந்தபோது ஆரம்பிக்கப்பட்ட திட்டங்கள் என்பதால் மாநகராட்சியாக நிலை உயர்த்தப்பட்ட பிறகு ஏற்பட்ட மக்கள் தொகைக்கு ஏற்ப மேல் நிலைத் தொட்டிகள் மற்றும் குடிநீர் மெயின் குழாய்கள் போதுமானதாக இல்லாததால் குடிநீர் வினியோகம் சீராக வழங்க இயலவில்லை. இதனால் சராசரியாக மாநகரில் 2ல் இருந்து 9 தினங்களுக்கு ஒருமுறை குடிநீர் வழங்கும் நிலையிருந்து வந்தது.

**5வது முறையாக தமிழகத்தின் முதல்வராக**

**தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள்**

பதவி ஏற்றவுடன் அவரது

**அன்புத் தம்பி சேலத்துச் சிங்கம் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் வீரபாண்டி எஸ்.ஆறுமுகம்** அவர்களது சீரிய முயற்சியினாலும், அவரது அறிவுரையின் பேரிலும் மாநகராட்சியில் எடுக்கப்பட்ட பல்வேறு நடவடிக்கைகளால் தற்சமயம் சராசரியாக 2ல் இருந்து 5 நாட்களுக்கு ஒருமுறை குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

## சேலம் மாநகராட்சியில் புதியதாக சேர்க்கப்பட்ட பகுதிகளுக்கு காவிரி குடிநீர் விரிவாக்கத் திட்டம்.

சேலம் மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட அனைத்துப் பகுதிகளுக்கும் காவிரி குடிநீர் வழஙக அரசு ஆணை எண். 134 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகு துறை நாள். 2.7.1998ல் ரூ. 2,484.00 இலட்சத்திற்கு அனுமதி வழஙகப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் 20 மேல்நிலை தொட்டிகள் மற்றும் பகிர்மான குழாய்கள் அமைத்திட திட்டமிடப்பட்டு இத்திட்டத்திற்குத் தேவையான நிதி ஆதாரத்தினை மான்யத்துடன் கூடிய கடனாக தமிழ்நாடு நகர்புற வளர்ச்சி நிதி நிறுவனத்தில் இருந்து பெற்று இத்திட்டப் பணிகளை நான்கு கட்டஙகளாகப் பிரிக்கப்பட்டு, இப்பணிகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் நடைபெற்று வருகின்றது. இதில் முதற்கட்டமாக ரூ. 6.50கோடி மதிப்பீட்டில் இரண்டு மேல்நிலை தொட்டிகள் கட்டி முடிக்கப்பட்டு பொதுமக்களின் பயனுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

இதில் இரண்டாம் கட்டமாக 7 மேல்நிலைத் தொட்டிகள் மற்றும் பகிர்மான குழாய்கள் அமைக்கும் பணிகளும், நான்காம் கட்டமாக 6 மேல்நிலை தொட்டிகள் மற்றும் பகிர்மான குழாய்கள் அமைக்கும் பணிகளும் முடிவடையும் தருவாயில் விரைவில் பொது மக்களின் பயனுக்கு கொண்டு வரப்பட உள்ளது. மூன்றாம் கட்டமாக நடைபெற உள்ள 5 மேல்நிலைத் தொட்டிகளின் பணிகளுக்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினரால் ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு நடவடிக்கையில் உள்ளது. இப்பணிகளை நடப்பாண்டில் முடித்திடவும் திட்டமிடப்பட்டுள்ளது. இந்நிலையில் இத்திட்டத்தின் மதிப்பீடு ரூ. 33.73 கோடிக்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினரால் தயாரிக்கப்பட்டு அரசின் அனுமதிக்கு அனுப்பப்பட்டுள்ளது எனவும், இத்திட்டப் பணிகளின் செலவிற்காக தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதி நிறுவனத்தில் இருந்து மான்யத்துடன் கூடிய கடனாக ரூ. 13.50 கோடி பெறப்பட்டு மாநகராட்சி நிதியுடன் சேர்ந்து ரூ. 15.11 கோடி தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு வழஙகப்பட்டுள்ளது. இப்பணிகள் நிறைவடையும் தருவாயில் மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட அனைத்துப் பகுதிகளுக்கும் மேல்நிலைத் தொட்டிகளில் இருந்து பகிர்மான குழாய்கள் மூலம் காவிரி குடிநீர் வழஙகப்பட உள்ளது.

## <u>மாநகராட்சிக்கென தனிக் குடிநீர் திட்டம்</u>

மாநகராட்சிப் பகுதியில் ஏற்கனவே உள்ள திட்டஙகளில் இருந்து வழஙகப்படும் நீர் ஆதாரத்தினைக் கொண்டு மாநகராட்சியின் அனைத்துப் பகுதிகளுக்கும் முழுமையாக குடிநீர் வழஙக இயலாது என்பதனைக் கருத்தில் கொண்டு மாநகராட்சியால் பராமரிக்கப்படும் புதிய தனித்ததொரு குடிநீர் திட்டம் தயாரிக்க மாநகராட்சியால் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினரைக் கோரப்பட்டது. ஆனால் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் அவ்வாறு தனித்ததொரு குடிநீர் திட்டம் தயாரித்தால் கூடுதல் செலவு ஆகும் எனவும், தலைவாசல், கெஙகவள்ளி போன்ற சிறப்பு ஊராட்சிகளையும் மற்றும் மாநகராட்சியினையும் சேர்த்து ரூ.210.00 கோடிக்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினர் பராமரிக்கும் கூட்டுக் குடிநீர் திட்டமாக நிறைவேற்ற திட்ட விபர அறிக்கை தயாரித்தனர்.

கழக அரசு மே 2006ல் மீண்டும் பதவி ஏற்றதும் சேலத்தின்பால் அக்கறையும், சேலம் மக்களின்பால் தனி அன்பும், சேலம் மாநகரத்தின் வளர்ச்சியையே தனது அன்றாடச் சிந்தனையாக கொண்டு செயல்படும்

**மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்**

**வீரபாண்டி திரு. எஸ்.ஆறுமுகம் அவர்களது**

சீரிய முயற்சியில் கழக அரசு பொறுப்பேற்ற முதல் மாதத்திலேயே 08–06–2006 அன்று

**மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்**

**திரு. மு.க ஸ்டாலின் அவர்கள் தலைமையிலும்**

மற்றும்

**மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்**

**வீரபாண்டி திரு. எஸ். ஆறுமுகம் அவர்கள் முன்னிலையிலும்**

அரசு செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகல் துறை, நகராட்சி நிர்வாக ஆணையர், மேலாண்மை இயக்குனர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், சேலம் மாநகராட்சி ஆணையாளர், சேலம் மாநகராட்சிப் பொறியாளர்கள் மற்றும் உயர் அதிகாரிகளுடன் ஆய்வுக் கூட்டம் நடத்தப்பட்டது.

அந்தக் கூட்டத்தில்

**மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள், .**

சேலம் மாநகராட்சிக்கு கூட்டுக் குடிநீர் திட்டமாக செயல்படுத்தினால் வழியோர கிராமங்கள் குடிநீரை எடுத்துக் கொள்வதை வாரியத்தினரால் கட்டுப்படுத்த இயலாது எனவும், தனியான குடிநீர் திட்டம் தேவை எனவும் வலியுறுத்தி சொன்ன கருத்தினை

**மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்**

ஏற்றுக்கொண்டு தனித்திட்டமாக சேலம் மாநகராட்சிக்கு தயாரிக்க உத்திரவு வழஙகினார்கள். அதன் அடிப்படையில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் இதற்கு மதிப்பீடு ரூ.178.00 கோடி ஆகும் எனவும், பராமரிப்புக்கு ஆண்டொன்றுக்கு ரூ.18.52 கோடி ஆகும் எனவும் கருத்துரு வழஙகியது.

அதன் அடிப்படையில் இத்திட்டத்திற்கான நிதியினைப் பெற தமிழ்நாடு நகர்ப்புற உள் கட்டமைப்பு மேம்பாடு நிதி நிறுவனத்தினை அணுகியதில் இந்தத் திட்ட மதிப்பீட்டினை ஆய்வு செய்து திட்ட மதிப்பீடு மற்றும் திட்ட பராமரிப்புச் செலவு ஆகியவை கூடுதலாக உள்ளது எனவும், அதனைக் குறைப்பதற்கு வழிவகைகளை ஆய்ந்து அதன் பின்னர் நிதி நிறுவனத்தினை அணுகுமாறும் தெரிவிக்கப்பட்டது.

அதன் அடிப்படையில் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை, அவர்கள் தகுதி வாய்ந்த திட்ட ஆலோசகரை நியமனம் செய்ய ஒப்பந்தப்புள்ளிகள் வரவழைக்கப்பட்டு அரசு சார்பு நிறுவனமான தமிழ்நாடு நீர் நிதி முதலீட்டுக் கழகத்தினரை திட்ட ஆலோசகராக நியமனம் செய்துள்ளார்கள். மேற்படி திட்ட ஆலோசகர்கள் மூன்று மாதத்திற்குள் புதிய திட்ட மதிப்பீடு தயாரித்து வழஙக உள்ளார்கள். இத்திட்டம் இந்த அறிக்கை ஆண்டில்

**மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின்**

முயற்சியால் செயல்படுத்தப்பட்டு மாநகர மக்களின் தலையாய பிரச்சினையான குடிநீர் பிரச்சினை முழுவதும் நீங்கி மக்கள் பயன்பெறுவார்கள் என்பதனை இம்மாமன்றத்திற்கு பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

## <u>பாதாள சாக்கடைத் திட்டம்</u>

சேலம் மாநகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டத்தை செயல்படுத்த சுத்திகரிப்பு நிலையம் பள்ளப்பட்டி ஏரியில் அமைக்க உத்தேசிக்கப்பட்டது. இந்த உத்தேசத்திற்கு ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டதால் பனமரத்துப்பட்டி ஏரிப்பகுதியில் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கத் திட்ட ஆலோசகரான மெஸர்ஸ். கன்சல்ட்டிங சர்வீஸஸ் (இந்தியா) பிரைவேட் லிமிடெட் , சென்னை, அவர்கள் மூலம் திருத்திய மதிப்பீடு ரூ.149.56 கோடிக்கு தயாரித்து திருத்திய நிர்வாக அனுமதி வேண்டி 18.8.2006ல் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை, அவர்களுக்கு அனுப்பப்பட்டது. பின்னர் **மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்** அவர்களின் தலைமையில் வணக்கத்திற்குரிய மேயர், துணை மேயர், ஆணையாளர் மற்றும் மாநகராட்சி செயற் பொறியாளர்கள் அடஙகிய குழு பூனா மற்றும் கோவாவில் பனாஜி நகருக்கு சென்று அஙகு நவீன தொழில் நுட்பத்துடன் சுற்றுச் சூழலுக்கு எவ்வித பாதிப்பும் இல்லாமல் அமைக்கப்பட்டுள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையஙகள் போன்று சேலம் மாநகராட்சி பகுதியிலேயே பொது மக்களுக்கு சுற்றுப்புற சுகாதார கேடு ஏற்படாவண்ணம் 1. வெள்ளக்குட்டை 2.வண்டிப்பேட்டை 3. மண்குட்டை மற்றும் 4. அணைமேடு பகுதிகளில் நான்கு இடஙகளில் நவீன சுத்திகரிப்பு நிலையஙகள் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. அதற்கான திருத்திய திட்டம் அரசினருக்குச் சமர்ப்பிக்கப்படவுள்ளது. **மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்** அவர்களது ஆய்வு மற்றும் அறிவுரை காரணமாக திட்டச்செலவில் ரூ.20.00 கோடி வரை குறைய வாய்ப்புள்ளது. இத்திட்டத்திற்கு 2007–2008ம் அறிக்கை ஆண்டில் நிதி ஒதுக்கீடு பெற்று உடன் செயல்படுத்தப்பட உள்ளது என பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

## <u>திருமணிமுத்தாறு அபிவிருத்தித் திட்டம் – நிலை II</u>

சேலம் மாநகராட்சியின் மையப்பகுதியில் அமைந்துள்ள திருமணிமுத்தாற்றினை சீரமைத்திட முதற்கட்டப் பணிகள் ரூ.5.40 கோடி மதிப்பீட்டில் முடிக்கப்பட்டது. இப்பணியில் 1.5 கி.மீ தூரத்திற்கான சீரமைப்பு நிறைவேற்றப்பட்டது. தற்போது இரண்டாம் கட்டமாக திருமணிமுத்தாற்றில் மேலும் 2.80 கி.மீ நீளத்திற்கு சீரமைத்திடவும், இத்துடன் சேர்த்து வெள்ளக்குட்டை ஓடையினை 2.86 கி.மீ நீளத்திற்கு சீரமைத்திடவும் திருமணிமுத்தாற்றின் மிக முக்கியமான மூன்று இடஙகளில் பாலஙகள் அமைத்திடவும் ரூ.31.50 கோடி திட்ட மதிப்பீட்டிற்கு

அரசு ஆணை எண்.85 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகல் துறை நாள் 6.9.2006ல் நிர்வாக அனுமதி பெற்று நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகத்தில் உரிய தொழில் நுட்ப அனுமதியும் பெறப்பட்டுள்ளது. இத்திட்டத்தினைச் செயல்படுத்த 05.01.07ம் தேதியில் தேசிய அளவில் தமிழ் மற்றும் ஆஙகில தினசரி நாளிதழ்களில் விளம்பரம் செய்து ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டும் ஒப்பந்தப்புள்ளிகள் ஏதும் வரப்பெறவில்லை. எனவே இரண்டாம் அழைப்பாக 21.03.07 தேதியில் ஒப்பந்தப்புள்ளி அழைப்பு கோரப்பட்டுள்ளது. ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டவுடன் 2007–2008ம் அறிக்கை ஆண்டில் பணிகள் தொடஙகி நிறைவேற்றிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**<u>சாலைப் பராமரிப்பு</u>**

சேலம் மாநகராட்சிக்கு அரசாணை எண்.324(டி), நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகும் துறை மூலம் சாலை மேம்பாட்டிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ.38.00 கோடியில் 246 கி.மீ நீளம் கொண்ட 358 சாலைப் பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்ற 318 பணிகளுக்கு மட்டும் பணி ஆணை வழஙகி பணிகள் நடைபெற்று வருகின்றன. இதில் 139 பணிகள் ரூ.1,196.00 இலட்சம் மதிப்பீட்டில் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள பணிகளை விரைந்து முடித்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## <u>பொதுநிதியில் அடிப்படை வசதி பணிகள் (சாலை,வடிகால், சிறுபாலம் மற்றும் கட்டிடம் )</u>

2006–2007ம் ஆண்டில் மாநகராட்சி சாலைகள், வடிகால்கள் மற்றும் சிறுபாலஙகள் அமைக்கவும், பராமரிக்கவும் 213 எண்ணிக்கையிலான பணிகள் ரூ.1,098.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கெள்ளப்பட்டன. இதில் 171 எண்ணிக்கையிலான பணிகள் ரூ. 724.00 இலட்சம் மதிப்பீட்டில் செய்து முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள பணிகள் விரைவாக நடைபெற்று வருகின்றன. 2007–2008ம் அறிக்கை ஆண்டில் மேற்படி வசதிகளை மேம்படுத்த ரூ.850.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும் கட்டிடஙகள் பராமரிப்பு தலைப்பின் கீழ் தற்போது பழுதுபட்ட நிலையில் உள்ள சத்துணவுக் கூடஙகளை ரூ. 15.00 லட்சம் மதிப்பீட்டில் பராமரிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**<u>தெரு விளக்குகள்.</u>**

சேலம் மாநகராட்சிப் பகுதியில் தற்போது 60 கோட்டங்களிலும் குழல் விளக்குகள் 15,293 எண்ணிக்கையும் , சோடியம் ஆவி விளக்குகள் 6,239 எண்ணிக்கையும், உயர் மின் கோபுரம் 2 எண்ணிக்கையும் உள்ளன. மேற்படி தெரு விளக்குகளை தனியார் நிறுவனத்தின் மூலம் பராமரிப்பு பணியை சிறப்பாகச் செய்து 99 சதவீத தெரு விளக்குகள் எரிய வைக்கப்பட்டு வருகிறது. 2007–2008ம் நிதியாண்டில் மாநகராட்சி எல்லைப் பகுதியில் உள்ள புறவழிச் சாலைகளில் புதிய சோடியம் ஆவி விளக்குகள் 160 எண்ணிக்கையில் ரூ.65.00லட்சம் மதிப்பீட்டில் அமைக்கவும், புதிய குழல் விளக்குகள் மாநகராட்சியின் பல்வேறு இடஙகளில் 250 எண்ணிக்கையில் ரூ.31.50 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. மரபு சாரா எரிசக்தியைப் பயன்படுத்தி மின்சாரச் செலவை மீதப்படுத்தும் நோக்குடன் சூரிய ஒளி தெருவிளக்குகள் 60 எண்ணிக்கையில் ரூ.10.80 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட உள்ளது.

**<u>காற்றாலை மூலம் மின்சாரம் தயாரித்தல்.</u>**

மாநகராட்சியில் உள்ள மின் இணைப்புகள் மூலம் உபயோகப்படுத்தப்படும் மின்சாரத்திற்கு செலுத்தப்படும் மின்சாரக் கட்டணம் வருடத்திற்கு வருடம் கூடிக் கொண்டே போகிறது. இதனைக் கட்டுப்படுத்துவது இயலாத காரணமாக உள்ளது. எனவே இதனைக் கருத்தில் கொண்டு மாநகராட்சியில் பயன்படுத்தப்படும் மின்சார அளவிற்கு ஈடாக காற்றாலை மூலம் மின் உற்பத்தி செய்து அதனை மநாகராட்சிக்கு ஈடு செய்து கொள்ளவும் அதற்காக ரூ. 3.00 கோடி செலவில் புதிய காற்றாலைகளுக்குரிய இடத்தினை உரிய தொழில் நுட்ப வல்லுநர்களைக் கொண்டு தேர்வு செய்து அமைக்கப்பட உள்ளது. தமிழக அரசிடம் உரிய அனுமதி பெற்று இத்திட்டம் செயல்படும்போது மாநகராட்சியின் மின் கட்டண செலவு வெகுவாக குறைந்துவிடும்.

## <u>கணினிமயமாக்குதல்</u>

மாநகராட்சி நிர்வாகத்தின் அலுவலக நடைமுறைகளை விரைவாக்க கணினி மயமாக்கும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. மாநகராட்சியின் மைய அலுவலகத்திலும், நான்கு மண்டல அலுவலகஙகளிலும் கணினிகள் நிறுவப்பட்டுள்ளன. நான்கு மண்டல அலுவலஙகளிலும் மற்றும் இரண்டு வசூல் மையஙகளிலும் அந்தந்த மண்டலஙகளுக்குரிய வரி மற்றும் வரி இல்லாத இனஙகளை பொது மக்கள் நேரடியாகச் செலுத்திட வசதி செய்யப்பட்டுள்ளது. மேலும் இரண்டு வரி வசூல் சேவை மையஙகளை அமைக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இப்பணியை மேலும் அபிவிருத்தி செய்து மாநகரத்தின் எந்த ஒரு பகுதியைச் சேர்ந்தவரும் எந்த ஒரு வரி வசூல் சேவை மையத்திலும் தொகையைச் செலுத்தும் வகையில் மைய அலுவலகம், மண்டல அலுவலகங்கள் மற்றும் வரி செலுத்தும் சேவை மையங்களை தொடர்பு ஏற்படுத்தி இணைக்கப்படவுள்ளது. மேலும் மாநகராட்சியிலேயே அனைத்துத் திட்டங்கள் மற்றும் அதற்கான ஆவணங்களைத் தயாரிக்கும் பணியும் துவங்கப்பட உள்ளது. இப்பணிக்காக உரிய கணினி மற்றும் அது சம்மந்தமான சர்வர்ஸ், ஸ்கேனர், பிளாட்டர், பிரிண்டர் போன்ற அத்தியாவசியக் கருவிகளை ரூ.50.00 லட்சம் மதிப்பீட்டில் வாங்கி நிறுவி திட்டங்களை நிறைவேற்ற உத்தேசிக்கப்பட்டுள்ளது. மாநகராட்சி மைய அலுவலகத்திலும், நான்கு மண்டல அலுவலகங்களிலும் மாநகர மக்கள் வரி விவரங்கள், கட்டணங்கள் முதலான மாநகராட்சி சம்மந்தப்பட்ட அனைத்துத் தகவல்களையும் தாங்களே தெரிந்து கொள்ளும் வகையில் சேலம் மாநகராட்சிக்கான இணையதளத்தில் (http://www.salemcorporation.com/citizen services) வரிவிதிப்புதாரர் பெயர், செலுத்த வேண்டிய தொகை மற்றும் நிலுவை போன்ற விவரங்களை அறிந்து கொள்ளும் வசதி செய்யப்பட்டுள்ளது.

வரும் நிதியாண்டில் மாநகராட்சி அலுவலக நடைமுறையில் கணினிமயமாக்குதலை விரிவுபடுத்துகின்ற வகையில் மாநகராட்சி அலுவலகத்தில் நடைபெறும் அன்றாட அலுவல்களை காகிதம் மூலம் கோப்புகள் மேற்கொள்வதைத் தவிர்த்து கணினி மூலம் நடவடிக்கை மேற்கொள்ளவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. அதற்காக மைய அலுவலகத்தின் அனைத்துப் பிரிவுகள் மற்றும் மண்டல அலுவலகங்கள் அனைத்தும் கணினிமயமாக்கல் மூலம் இணைக்கப்பட்டு அனைத்து அலுவலர்களும் கணினி மூலமே கோப்புகளை கையாண்டு கோப்புகளற்ற நிர்வாகம் நவீனப்படுத்துதல் நடைமுறைப்படுத்தப்படும்.

பொதுமக்கள் மாநகராட்சிக்குச் செலுத்த வேண்டிய வரிகளை அந்தந்தப் பகுதிகளில் சென்று வசூல் செய்வதற்கு வசதியாக மாநகராட்சி வாகனத்தில் நவீன முறையில் கட்டமைப்பு ஏற்படுத்தி கணினி மூலம் வசூலிக்கும் நடமாடும் வரி வசூல் சேவை மையம் ஏற்படுத்தப்பட உள்ளது.

இது தவிர வங்கிகளிலும் வரிகளை நேரடியாக மக்கள் செலுத்தும் வகையில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**<u>திடக்கழிவு மேலாண்மைத் திட்டப் பணிகளுக்கு புதிய வாகனம் வாஙகுதல்</u>.**

சேலம் மாநகராட்சிப் பகுதியில் அன்றாடம் சேகரம் ஆகும் திடக்கழிவுகளை தற்போது உள்ள டிராக்டர்கள் மூலம் தெருக்களில் இருந்து எடுத்து எருமாபாளையம் மற்றும் வீராணத்தில் உள்ள உரக்கிடஙகுகளில் கொட்டப்படுகிறது. தற்போது செட்டிச்சாவடி பகுதியில் திடக்கழிவு மாற்று இடம் அமைய உள்ளதால் மாநகரத்தில் இருந்து திடக்கழிவுகளை எடுத்துச் செல்லவும், தெருக்களில் வீடுகள் தோறும் சேகரம் செய்ய 6 எண்ணிக்கை டம்பர் பிளேசர்கள், 72 கண்டெய்னர்கள் முதலியன ரூ.98.00 இலட்சம் மதிப்பீட்டிலும், நவீன கழிவு நீர் உறிஞ்சி அகற்றும் வாகனம் 2 எண்ணிக்கைகள் ரூ.30.00 இலட்சம் மதிப்பீட்டிலும், ஆட்டோ டிப்பர் 24 எண்ணிக்கைகள் ரூ. 48.00 இலட்சம் மதிப்பீட்டிலும் வாஙகி பயன்பாட்டிற்கு கொண்டுவர 2007–2008ம் ஆண்டில் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**<u>நவீன இறைச்சிக் கொட்டில் ( Modern Slaughter House )</u>**

சேலம் மாநகராட்சிக்கு உட்பட்ட கோட்டம் எண். 50 மணியனூரில் பகுதி–II திட்டத்தின் கீழ் 2006–2007ம் நிதியாண்டில் ( Part II Scheme ) நவீன வசதிகளுடன் ரூ. 30.00 இலட்சம் மதிப்பீட்டில் (அரசு மான்யம் ரூ. 10.00 இலட்சம் மற்றும் மாநகராட்சியின் பொது நிதியின் பஙகளிப்பு ரூ. 20.00 இலட்சம்) நவீன இறைச்சிக் கொட்டில் கட்ட மன்றம் தனது 22.12.206ந் தேதிய 315 எண் கொண்ட தீர்மானத்தில் அனுமதியளித்துள்ளது. மேலும் அரசு மேற்படி பணிக்கான விரிவான திட்ட அறிக்கையை தயாரித்து வழஙக ( Detailed Project Report ) சென்னை அபட்டியர் பிரைவேட் லிமிடெட் ( Chennai Abattoir Pvt Ltd ) என்ற நிறுனத்தை திட்ட ஆலோசகராக நியமித்துள்ளது. மேற்படி நிறுவனம் விரிவான திட்ட அறிக்கையினை தயாரித்து சமர்ப்பித்தவுடன் ஒப்பந்தப்புள்ளிகள் கோரி 2007–2008ம் நிதியாண்டில் பணி மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்படும்.

**<u>மகப்பேறு மருத்துவமனை மற்றும் குழந்தைகள் நல்வாழ்வு மையம்.</u>**

சேலம் மாநகராட்சி கோட்டம் எண். 52–ல் ஜாரிகொண்டலாம்பட்டி கள்ளிக் கோட்டை மெயின் ரோடு சுப்ரமணியசாமி கோயில் பின்புறம் அரசு மான்யம் ரூ. 20.00 இலட்சம் மதிப்பீட்டில் நவீன வசதிகளுடன் கூடிய தாய்சேய் நல விடுதி கட்டும் பணிக்கான பணி ஆணை வழஙகப்பட்டு, முதற்கட்டமாக மண் பரிசோதனைக்கான ஆய்வு முடிக்கப்பட்டு பணி துவஙகும் நிலையில் உள்ளது. மேற்படி பணி 2007–2008ம் நிதியாண்டில் முடிக்கப்படும். மேலும் கோட்டம்

எண். 57–ல் கருங்கல்பட்டி மார்க்கெட் பகுதியில் ரூ. 24.00 இலட்சம் மதிப்பீட்டில் (அரசு மான்யம் ரூ. 20.00 இலட்சம், மாநகராட்சியின் பங்களிப்பு ரூ. 4.00 இலட்சம்) நவீன வசதிகளுடன் கூடிய தாய் சேய் நல விடுதி கட்டும் பணியை மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு ஒப்பந்தப்புள்ளியின் தன்மையை இறுதி செய்ய மன்றத்திற்கு பொருள் வைக்கப்பட்டுள்ளது. மேற்படி பணி 2007–2008ம் நிதியாண்டில் முடிக்கப்படும்.

**<u>மருத்துவ மனைகள்.</u>**

சேலம் மாநகராட்சிக்குட்பட்ட கோட்டம் எண். 40ல் அண்ணா மருத்துவமனை வளாகத்தில் உள்ள மிகவும் பழமை வாய்ந்த மருத்துவமனைக் கட்டிடத்தை இடித்து அப்புறப்படுத்தி, மேற்படி இடத்தில் மாநகராட்சியின் பொது நிதியின் மூலம் ரூ. 30.00 இலட்சம் மதிப்பீட்டில் நவீன வசதிகளுடள் கூடிய தாய் சேய் நல விடுதி கட்டும் பணியை செயல்படுத்த மன்றம் தனது 24.11.06ந் தேதிய 253 எண் கொண்ட தீர்மானத்தில் அனுமதியளித்ததின் அடிப்படையில் மேற்படி பணிக்கு நகராட்சி நிர்வாக ஆணையரகத்தின் நிர்வாக அனுமதி பெற ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. நகராட்சி நிர்வாக ஆணையரகத்தின் நிர்வாக அனுமதி பெறப்பட்டவுடன் ஒப்பந்தப்புள்ளிகள் கோரி 2007–2008ம் நிதியாண்டில் பணி மேற்கொள்ளப்படும்.

**<u>எரி வாயு தகன மேடை</u>**

சேலம் மாநகராட்சிக்குச் சொந்தமான கோட்டம் எண். 12–ல் காக்காயன் சுடுகாட்டில், பகுதி II திட்டத்தின் கீழ், ( Part II Scheme 2006-2007 ) அரசு மான்யம் ரூ. 20.00 இலட்சம் மற்றும் மாநகராட்சியின் பொது நிதியின் பங்களிப்பு ரூ. 20.00 இலட்சம் ஆக மொத்தம் ரூ. 40.00 இலட்சம் மதிப்பீட்டில் ‘ **எரிவாயு தகன மேடை**’ அமைத்திட மன்றம் தனது 22.12.06ந் தேதிய 293 எண் கொண்ட தீர்மானத்தில் அனுமதியளித்துள்ளது. மேலும் மேற்படி பணிக்கு விரிவான திட்ட அறிக்கையை தயாரித்து அளித்திட சென்னை, அண்ணா பல்கலைக்கழகத்தினரை திட்ட ஆலோசகராக அரசு நியமித்துள்ளது.

மேற்படி பல்கலைக்கழகம் விரிவான திட்ட அறிக்கையினை தயாரித்து வழங்கும் பணியைத் துவங்கியுள்ளது. திட்ட அறிக்கையை சமர்ப்பித்தவுடன் ஒப்பந்தப்புள்ளிகள் கோரி 2007–2008ம் நிதியாண்டில் பணி மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்படும்.

இதனைத் தவிர கிச்சிப்பாளையம், சீலநாயக்கன்பட்டி, செவ்வாய்பேட்டை மற்றும் அம்மாப்பேட்டை போன்ற பகுதிகளில் உள்ள இடுகாடுகளிலும் ரூ. 40.00 லட்சம் மதிப்பீட்டில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

**தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் ஈமச்சடங்கு மான்யம்**

சேலம் மாநகராட்சி பகுதிகளில் வசிக்கும் ஆதி திராவிடர் / பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய கிருத்துவ ஆதி திராவிடர்கள் இறந்தால் அவர்களின் இறுதிச் சடங்கிற்காக இறந்தவரின் குடும்பத்திற்கு அக்குடும்பத்தின் ஆண்டு வருமானம் ரூ. 24,000/– க்கு மிகாமல் இருந்தால் ரூ.500/– உதவித் தொகையை தமிழக அரசு மான்யமாக வழங்கி வருகிறது. இத்திட்டத்தின் கீழ் இம்மாநகராட்சிக்கு 2006–2007 ஆம் நிதியாண்டில் ரூ. 2.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு இதுவரை ரூ. 1,25,500/– வழங்கப்பட்டுள்ளது.

**மாவட்ட ஆட்சியர் வளர்ச்சி நிதி.**

இரண்டாவது மாநில நிதிக்குழு மான்யம் சமன்பாடு மற்றும் ஊக்க நிதியின் ஒரு பகுதியாக மாவட்ட ஆட்சியர் வளர்ச்சி நிதி 2005–2006ன் கீழ், சேலம் மாநகராட்சிக்கு உட்பட்ட கோட்டம் எண். 5ல் ஏ.டி.சி. நகர், கோட்டம் எண். 17ல் அர்த்தனாரி கவுண்டர் தெரு, கோட்டம் எண். 23ல் நெடுஞ்சாலை நகர் முதல் பெங்களூர் பைபாஸ் வரை மற்றும் கோட்டம் எண். 32ல் பழைய பேருந்து நிலைய உட்புறம் மற்றும் வெளிப்புறத்தில் ஆக மொத்தம் ரூ. 46.97 இலட்சம் மதிப்பீட்டில் அரசு மானியம் ரூ. 44.67 இலட்சம் மற்றும் மாநகராட்சியின் பொது நிதியின் பங்களிப்பு ரூ. 2.30 இலட்சத்தில் அடிப்படை வசதிக்கான தார்சாலை மற்றும் வடிகால் அமைக்கும் பணிகளை செயல்படுத்திட பணி ஆணை வழங்கப்பட்டு மேற்படி பணிகள் அனைத்தும் 31.3.2007க்குள் முடிவடைந்து விடும்.

**பள்ளிக்கட்டிடம்.**

2006–2007ல் சேலம் மாநகராட்சியின் ஆளுகைக்கு உட்பட்டதும், மாநகராட்சியின் சொந்தக் கட்டிடங்களில் செயல்பட்டு வரும் துவக்கப்பள்ளி, நடுநிலைப்பள்ளி, உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் பராமரிப்பு மற்றும் கூடுதல் வகுப்பறைகள் கட்டும் பணிகள் ரூ.110.00 இலட்சம் மதிப்பீட்டில் முடிக்கப்பட்டுள்ளது. மேலும் 2007–2008ம் நிதியாண்டில் ரூ.110.00 இலட்சம் மதிப்பீட்டில் 10 பள்ளிகளில் பழுது, மராமத்துப் பணி மற்றும் கூடுதல் வகுப்பறைகள் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**<u>மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு – நீர் நிலைகளை மேம்படுத்துதல்.</u>**

மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பின் கீழ், ( Rain Water Harvesting Structure ) நீர் நிலைகளை மேம்படுத்தும் விதமாக அரசு மானியம் ரூ. 44.67 இலட்சம் மற்றும் மாநகராட்சியின் பஙகளிப்பு ரூ. 0.33 இலட்சம் ஆக மொத்தம் ரூ. 45.00 இலட்சம் மதிப்பீட்டில், சேலம் மாநகராட்சிக்குச் சொந்தமான பனமரத்துப்பட்டி ஏரியில் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ள மன்றம் தனது 22.12.2006ம் தேதிய 311 எண் கொண்ட தீர்மானத்தில் அனுமதியளித்துள்ளது. அதன் அடிப்படையில் பணிகளை செயல்படுத்த ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு பணி மேற்கொள்ள நடவடிக்கையில் உள்ளது.

**<u>ஒருஙகிணைந்த குடியிருப்பு குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் ( IHSDP ) (Integrated Housing Slum Development Programme )</u>**

சேலம் மாநகராட்சியின் 4 வார்டு அலுவலகஙகளுக்கு உட்பட்ட அஙகீரிக்கப்பட்ட 113 குடிசை மற்றும் குடிசை சார்ந்த பகுதிகளில் குடிசைகளே இல்லாத குடியிருப்பை மேம்படுத்தியும் மற்றும் அடிப்படை வசதிகளை ரூ. 199.76 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்திட விரிவான திட்ட அறிக்கை தயாரித்து அரசிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அரசிடமிருந்து நிர்வாக அனுமதி கிடைக்கப் பெற்றவுடன் ஒப்பந்தப்புள்ளிகள் கோரி 2007–2008ம் நிதியாண்டில் பணி மேற்கொள்ளப்படும்.

**<u>யூ.ஐ.டி.எஸ்.எஸ்.எம்.டி ( UIDSSMT ) ( Urban Infrastructure Development Scheme for Small and Medium Town ).</u>**

மேற்படி திட்டத்தின் கீழ் 2007–2008ம் நிதியாண்டில் சேலம் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மழைநீர் வடிகால் அமைத்தல், குடிநீர் விநியோகப் பணிகள், நீர்நிலை மேம்படுத்துதல் போன்ற அத்தியாவசியப் பணிகளை ரூ. 24.00 கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்திட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**<u>நவீன கூட்ட அரஙகு அமைத்தல்</u>**

சேலம் மாநகராட்சியில் அன்றாடம் நடைபெறும் ஆய்வுக் கூட்டஙகளை நடத்த ஆய்வுக் கூட்ட அரஙகு இல்லாத காரணத்தினால் ஒவ்வொரு முறையும் வணக்கத்திற்குரிய மேயர், ஆணையாளர் மற்றும் அலுவலர்கள் ஆகியோரின் அறைகளில் கூட்டம் நடத்தப்பட வேண்டிய நிலை உள்ளது. இதனைக் கருத்தில் கொண்டு மைய அலுவலகத்தில் அனைத்து வசதிகளும் கொண்ட நவீன கூட்ட அரஙகு சுமார் ரூ.15.00 லட்சம் செலவிலும், அதற்குத் தேவையான நவீன இருக்கைகள், ஒலி மற்றும் ஒளி அமைப்புகள் சுமார் ரூ.5.00 லட்சம் செலவிலும் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**<u>புதிய சுகாதார வளாகம் கட்டுதல் மற்றும் பராமரிப்பு செய்தல்</u>**

2007–2008ம் நிதியாண்டில் சேலம் மாநகராட்சியின் 4 மண்டலஙகளுக்குட்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள மாநகராட்சியின் கட்டுப்பாட்டில் உள்ள அனைத்து கழிப்பிடஙகளிலும் மராமத்துப் பணியை ரூ. 45.00 இலட்சம் மதிப்பீட்டில் நிறைவேற்றி முடிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

ஜல்லிக்காடுப் பகுதியில் உள்ள பொது மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான கழிப்பிடம் கட்டும் கோரிக்கையினை

**மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களால்**

பரிசீலிக்கப்பட்டு அதற்குத் தேவையான இடத்தினை அரசினர் தொழிற் பயிற்சி நிறுவனத்திடமிருந்து மாநகராட்சிக்கு வழஙக உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேற்படி இடத்தில் சுமார் 5963 ச.அடி நிலத்தில் ரூ.18.50 லட்சம் மதிப்பீட்டில் ஒருஙகிணைந்த நவீன சுகாதார வளாகம் அமைக்கப்பட உள்ளது.

**<u>புதிய அலுவலகம் கட்டுதல்.</u>**

சேலம் மாநகராட்சி மைய அலுவலகம் ஏற்கனவே உள்ள பழைய கட்டிடஙகளில் இயஙகி வருகிறது. தற்சமயம் உள்ள பொறியியல் பிரிவு, கணக்குப் பிரிவு, நலப்பிரிவு மற்றும் இதர பிரிவுகள் பழுதடைந்த கட்டிடஙகளில் இயஙகி வருகிறது. இந்த கட்டிடஙகள் பழுதடைந்த நிலையில் இருப்பதாலும், இடவசதி போதுமானதாக இல்லாத காரணத்தினாலும், அறிக்கையாண்டில் முழுமையான நவீன வசதிகளுடன் கூடிய மன்றக் கூடம் மற்றும் அனைத்து வசதிகளுடன் கூடிய அலுவலகக் கட்டிடம் அடஙகிய மைய அலுவலகக் கட்டிடம் ரூ. 5.00 கோடி மதிப்பீட்டில் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது.

**<u>பூஙகாக்கள்</u>**

சேலம் மாநகராட்சியின் 4 மண்டல பகுதிகளிலும் தலா ஒன்று வீதம் மொத்தம் 4 பூஙகாக்கள் அனைத்து உள் கட்டமைப்பு மற்றும் பொழுதுபோக்கு அம்சஙகளுடன் சிறப்பாக மேம்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**<u>நிலத்தடி மின் கம்பிப் பாதை அமைத்தல்</u>**

மாநகராட்சிப் பகுதிகளிலுள்ள மின்கம்பி தடஙகள், தொலைபேசிக்கம்பி தடஙகள், ஒளி இழை கம்பித் தடஙகள் முதலியவற்றையும் பாதாள சாக்கடைத் திட்ட குழாய்கள் மற்றும் குடிநீர் வழஙகல் குழாய்கள் ஆகியவற்றையும் நெடுஞ்சாலைத் துறை மற்றும் மாநகராட்சிக்கு சொந்தமான சாலைகள், தெருக்களில் சம்பந்தப்பட்ட பல்வேறு துறையினரும் மாநகராட்சியும் பதித்து வைப்பதாலும் அடிக்கடி பராமரிப்பு செய்வதாலும் சாலைத் தளஙகள் தொடர்ந்து சேதப்படுத்தப்படுகின்றன. இதனால் பொது மக்கள் மற்றும் வாகனஙகள் போக்குவரத்திற்கு மிகுந்தத் தொல்லையும் இடைஞ்சலும் ஏற்படுகிறது. இதன் காரணமாக ஆண்டுதோறும் சாலைகள் அமைக்கவும், தளஙகளை புதுப்பிக்கவும் மாநகராட்சி ஏராளமாக செலவு செய்யும் நிலை உள்ளது.

இந்நிலையை மாற்றிடவும் சாலை அமைக்க அரசு வழஙகும் நிதியும் மாநகர மக்களின் வரிப்பணமும் வீணாகாமல் தடுக்கவும் **மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்** அனைத்துத் துறை பொறியாளர்களின் கூர்ந்தாய்வு கூட்டத்தில் வழஙகிய அறிவுரைப்படி சேலம் மாநகராட்சிக்கான பாதாள சாக்கடைத் திட்டம் நிறைவேற்றப்படும்போது அனைத்து சாலைகள் மற்றும் தெருக்களில் தரைக்கு கீழே கம்பி தடஙகள் கொண்டு செல்வதற்கான Service Duct அமைக்கவும் அதன் மீது புதிய சாலைகள் அமைக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதனால் எதிர்காலத்தில் சாலைகள் சேதமடையாது.

இம்மாபெரும் திட்டத்தின் முதற்படியாக சேலம் மாநகரத்திலுள்ள அனைத்து மின் கம்பித் தடஙகளையும் தரைக்கு கீழ் செல்லும் கம்பித் தடஙகளாக (Under Ground Cable System) மாற்றியமைக்கும் சீரிய திட்டத்தை ரூ. 60.00 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு மின்சார வாரியத்தினர் மேற்கொள்ள

**மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின்** பரிந்துரையினை ஏற்று

**மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்** கனிவுடன்

அனுமதியளித்துள்ளார்கள் என்பதை பெரு மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

## நகர கூட்டமைப்புத் திட்டம் அலுவல் திட்டம்
## விரிவான திட்ட அறிக்கை மற்றும் மதிப்பீடுகள் தயாரிக்க அனுமதிக்கப்பட்ட சிறப்புத் திட்டங்கள்

சேலம் மாநகரப் பகுதியில் மாநகராட்சியால் உடனடியாக மேற்கொள்ள வேண்டியதும், இன்றியமையாததுமான 12 மேம்பாட்டுத் திட்டங்களுக்கு தொழில்நுட்ப ஆலோசகர்களை நியமித்து விரிவான திட்ட அறிக்கை, திட்ட மதிப்பீடு முதலியவற்றை தயாரித்துக் கொடுக்க நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை, அவர்களை சேலம் மாநகராட்சியின் சார்பில் கேட்டுக்கொள்ளப்பட்டது. நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை, அவர்களின் 1.2.2006ம் தேதிய கடிதம் ந.க.எண். 1920/2006/WB3–ல் மாநகராட்சி சமர்ப்பித்துள்ள திட்டங்கள் பல்வேறு தொடர்புடைய அம்சங்களைக் கொண்டுள்ளதாகவும், புதுமையானதாகவும் உள்ளதால் அனைத்து 12 திட்டங்களையும் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் III ன் கீழ் திட்ட தயாரிப்பு நிதியில் எடுத்துக்கொள்ள உள்ளதாகத் தெரிவித்துள்ளார்கள். தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு நிதி சேவை நிறுவன மேலாண்மை இயக்குநர் மற்றும் முதன்மை செயல் அலுவலர் அவர்களின் 3.3.06ம் தேதிய கடித எண். HP/IR/IID/Salem/01–ல் மின்சார சேமிப்பு திட்டத்திற்கான அறிக்கை ஏற்கனவே வழங்கப்பட்டு விட்டதால் அதன் மீது நடவடிக்கை தொடங்குமாறும், எஞ்சிய திட்டங்களை தயாரிக்க தொழில்நுட்ப ஆலோசகரை நியமிக்க நிதி நிறுவனம் நடவடிக்கை மேற்கொள்ள உள்ளதாகவும் தெரிவித்துள்ளார்கள். தற்போது தமிழ்நாடு நகர்ப்புற உள் கட்டமைப்பு நிதி சேவை நிறுவன மேலாண்மை இயக்குநர் அவர்களின் 20.11.2006ம் தேதிய கடித எண். Salem/II D/designs/1-ல் சேலம் மாநகரத்தின் ஒருங்கிணைந்த உள் கட்டமைப்பு அபிவிருத்திக்காக கீழ்காணும் மேம்பாட்டுத் திட்டங்களுக்கு விவர அறிக்கை, திட்ட மதிப்பீடு தயாரித்து தொழில் நுட்ப அனுமதி பெற்றுத்தர புது டெல்லியைச் சேர்ந்த M/s. Span Consultants Private Ltd., நிறுவனத்தாரை மாநகராட்சியின் தொழில்நுட்ப ஆலோசகர்களாக நியமித்து விவரம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## திட்ட விவரம்

1. **மாநகராட்சி மத்திய பேருந்து நிலையம் மேம்படுத்துதல்**

   மாநகராட்சி மத்திய பேருந்து நிலையத்தை விரிவுபடுத்துதல், பல அடுக்கு வண்டி நிறுத்துமிடம் அமைத்தல் மற்றும் தொடர்புடைய அனைத்து மேம்பாட்டுப் பணிகள் ஆகியவற்றிற்கான திட்டம் தயாரித்தல்.

2. **சுமையுந்து நிலையம் அமைத்தல்**

   எதிர்கால போக்குவரத்துத் தேவைக்கு ஏற்பவும், நகரத்தின் போக்கு வரவு நெரிசலை குறைக்கும் வகையிலும் தேவையான அனைத்து அடிப்படை வசதிகளையும், போதிய இடவசதியும் கொண்ட புதிய சுமையுந்து நிலையம் அமைத்தல்.

3. **முழுமையான போக்கு வரவுப் பொறியியல் ஆய்வு**

   மாநகரத்தின் உள்ளும், புறத்திலும் போக்கு வரவு, புள்ளிவிவரம், தேவைப்படும் சாலை அகலப்படுத்துதல், மேம்பாடு, மேம்பாலஙகள், கீழ்பாலஙகள், உள் சுற்றுச் சாலை, வெளிச் சுற்றுச் சாலை முதலியவற்றுடன் நகரத்தின் எதிர்காலத் தேவைக்கேற்ப போக்குவரவு மேலாண்மைத் திட்டம் தயாரித்தல்.

4. **நீர் நிலைகள் மேம்பாட்டுத் திட்டம்**

   மாநகரத்தின் உள்ளும், வெளியிலும் உள்ள அனைத்து நீர் நிலைகளிலும் ஆய்வு செய்து நகரக் கழிவுகளால் மாசுபடுவதைக் கண்டறிந்து தடுத்தல், தூர் எடுத்தல், சுற்றுச் சுவர் கட்டுதல், சமுதாய பயனுக்கு ஏற்ற வகையில் பூஙகாவாகவும், திறவிடமாகவும், படகுத்துறை, மீன் வளர்ப்பு, நன்னீர் சேமிப்பு முதலிய அம்சஙகளை கொண்ட ஒருஙகிணைந்த மேம்பாட்டுத் திட்டம் தயாரித்தல்.

இத்திட்டஙகளைத் தயாரிக்க நன்னிலைக் கட்டணமாக ரூ. 29,75,001/– மற்றும் சேவை வரி முழுவதையும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை, மேலாண்மை இயக்குனர், தமிழ்நாடு நகர்ப்புற உள் கட்டமைப்பு நிதி சேவை நிறுவனம் அவர்களால் முழு மான்யமாக வழஙகப்படுகிறது. திட்டஙகள் அனைத்தும் நான்கு மாத காலத்தில் தயாரிக்கப்பட்டு அரசினருக்குச் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

## பனமரத்துப்பட்டி ஏரி சுற்றுச் சூழல் மேம்பாட்டுத்திட்டம் மற்றும் பனமரத்துப்பட்டி ஏரி குடிநீர் வழஙகல் திட்டம்.

சேலம் மாநகரத்தின் மேம்பாட்டிற்கென பல்வேறு உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டஙகள்

**மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்,**

**மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்,**

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகு துறை அரசு செயலாளர் அவர்கள், நகராட்சிகளின் நிர்வாக ஆணையாளர் அவர்கள் மற்றும் தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு மற்றும் நிதி சேவை நிறுவன மேலாண்மை இயக்குநர் அவர்கள் ஆகியோரால் மிகவும் முனைப்புடன் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

சேலம் மாநகரின் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதோடு சுற்றுச் சூழலையும் மேம்படுத்துவது மிகவும் இன்றியமையாததாகும். எனவே சேலம் மாநகராட்சிக்கு உரிமையான பனமரத்துப்பட்டி ஏரிப்பகுதியை சிறந்ததொரு சுற்றுச்சூழல் மேம்பாட்டுத் திட்டமாக (Ecological Development Project) தயாரித்து நிறைவேற்ற வேண்டியுள்ளது. இத்திட்டத்தில் பிற்காணும் அம்சஙகளை முன்னிலைப்படுத்தி மேம்பாடு செய்யப்படவேண்டும்.

1. நவீன முறையில் புனரமைக்கப்பட்ட குடிநீர்த் திட்டம்
2. ஏரியைத் தூரெடுத்தல்
3. ஏரிப்படுகையில் மண்ணரிப்பைத் தடுக்கவும், மண் வளத்தைப் பாதுகாக்கவும் விஞ்ஞான அடிப்படையில் பாதுகாப்ப ஏற்பாடுகள் செய்தல்
4. ஏரியின் கரைகளை பலப்படுத்தி, உயரப்படுத்தி அகலப்படுத்துதல்.
5. ஏரியை ஒட்டிய திறவிடத்தில் நகரத்தைப் பசுமைப்படுத்துதலை ஊக்குவிக்க நகர மக்களுக்கு அடக்க விலையில் தரமான பழ மரஙகள், மலர்ச்செடிகள், மூலிகைகள் ஆகிய கன்றுகள் வழஙக நாற்றஙகால் அமைத்தல்.
6. சுற்றுச்சூழல் மேம்பாட்டைப் போதிக்கும் மையம்.
7. ஏரியைச் சுற்றிலும் 11 கி.மீ. நீளத்திற்கு இரண்டு வரிசை பனை மரஙகளும் இடையில் 100 அடி அகலத்தில் அனைத்து வகை மூஙகில்களை வளர்த்து உயிர்வேலி அமைத்தல்.
8. ஏரியை ஒட்டிய திறவிடத்தில் தாதுப் பொருள் பூஙகா.

9. 200 ஏக்கர் பரப்பளவில் அனைத்து வகை மலர்ச் செடிகள், மலர்க் கொடிகள், மரஙகள் கொண்ட மலர் வனம்.

10. 500 ஏக்கர் பரப்பளவில் காடுகளில் மட்டுமே காணக்கூடிய அரிய வகை மற்றும் பல்வகை மரஙகள் கொண்ட தாவரவியல் பூஙகா.

11. இத்திட்டம் முழுவதும் நிதி வசதியில் சுயசார்புள்ளதாக இயஙகுவதற்கு 500 ஏக்கர் பரப்பளவில் அனைத்து வகை மாமரஙகளையும் கொண்ட தோப்பு அமைத்தல்.

12. எஞ்சிய படுகைப் பகுதி முழுவதும் அரிய வகை மரஙகளான சந்தனம், ஈட்டி, தேக்கு மரத் தோட்டம் அமைத்தல்.

13. நீர் தேஙகும் பகுதியோரம் நன்னீர்க் கடம்ப மரஙகள் (Fresh Water Mangrove Trees) கருவேல மரஙகள் வைத்துப் பறவைகள் சரணாலயம் அமைத்தல்.

14. அன்னப்பறவைகள் மற்றும் நீர்ப்பறவைகள் காப்பகம்.

15. பறவைகளுக்கான திட்டமிட்ட மீன் வளர்ப்பு.

16. தரமான அணுகு சாலைகள், மேற்பார்வைக்கான சுற்றுச் சாலைகள், வண்டிகள் நிறுத்துமிடம், குடிநீர் வசதி, சுகாதார வளாகம், மின் விளக்கு பாதுகாப்பு ஏற்பாடுகள் முதலிய உள்கட்டமைப்பு மேம்பாடு.

17. ஓட்டப்பயிற்சியாளர்களுக்கும், நடைப் பயிற்சியாளர்களுக்கும் பயன்படும் வகையில் பூஙகாக்களின் ஊடே தளமிட்ட பாதைகள் அமைத்தல்.

18. படகுத் துறை, படகுப் போக்குவரத்து.

19. ஏரியை ஒட்டிய திறவிடத்தில் மீன் காட்சியகம் (Acquarium).

20. வண்ணத்துப்பூச்சி இல்லம்

21. நீச்சல் குளம்

22. குன்றுச் சரிவில் இயற்கை அரஙகம் (Natural amphi theatre)

23. செயற்கை நீரூற்றுடன் ஒளிக்கற்றைக் காட்சி (Laser Show with artificial fountain)

24. இரண்டாம் கட்டமாக ஏரியை அடுத்துள்ள அனைத்துக் குன்றுப்புறம்போக்குப் பகுதிகளின் பராமரிப்பை மாநகராட்சி மேற்கொண்டு திட்டமிட்ட மரம் வளர்ப்பு.

25. மூன்றாம் கட்டமாக ஏரிப்பகுதியை அடுத்துள்ள ஜருகு மலை முதலிய காப்புக் காடுகளில் வனத்துறையுடன் ஒத்துழைத்து மேம்படுத்திய காடு வளர்ப்பு.

இது போன்ற பல்வேறு சுற்றுச்சூழல் அம்சஙகளையும் கருத்தில் கொண்டு சேலம் மாநகர மக்களுக்குச் சொந்தமான பனமரத்துப்பட்டி ஏரிப்பகுதியை மாநகர மக்களின் நிலையான சொத்தாக மேம்படுத்தச் சிறந்ததொரு சுற்றுச்சூழல் மேம்பாட்டுத் திட்டமாக்க (Ecological Development Project) சிறந்த தகுதியான தொழில்நுட்ப வல்லுநர்களை நியமித்து விரிவான திட்ட அறிக்கையும், மதிப்பீடும் தயாரித்துக் கொடுக்கவும், இத்திட்டத்தை தனித்த சுற்றுச்சூழல் மேம்பாட்டுத் திட்டமாக எடுத்துக் கொள்ளவும் நகராட்சிகளின் நிர்வாக ஆணையர் அவர்களையும் தமிழ்நாடு உள்கட்டமைப்பு நிதி சேவை நிறுவன மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமை நிர்வாக அலுவலர் அவர்களையும் கேட்டுக்கொண்டு உரிய முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இதே போன்று பனமரத்துப்பட்டி குடிநீர்த் திட்டத்தினையும் புதுப்பித்துச் செயல்பாட்டிற்குக் கொண்டு வர தொழில்நுட்ப ஆலோசர்களை நியமித்துத் திட்ட அறிக்கை தயாரித்துத் தரக்கோரி முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. விரைவில் ஆலோசகர்கள் நியமிக்கப்பட்டு விரிவான திட்ட அறிக்கை அரசினருக்குச் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

**<u>சேலம் மாநகராட்சி துப்புரவு பணியாளர்கள் மறு குடியமர்வு வீட்டு வசதித் திட்டம்</u>**

குடிசைகளிலும், பாழடைந்த குடியிருப்புகளிலும், வசித்துவரும் துப்புரவு பணியாளர்களின் துயர்துடைக்க, சேலம் மாநகராட்சியின் மன்றம் தனது 24.11.2006ம் தேதிய 238 என்ற எண்ணிட்ட தீர்மானத்தில், துப்புரவு பணியாளர்களின் மறுவாழ்விற்காக வீட்டுவசதி அளிக்க வேண்டி 1,000 துப்புரவு பணியாளர்களுக்கு குடியிருப்பு வசதிகள் அமைக்க அங்கீகாரம் அளித்துள்ளது. இத்திட்டம் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தால் அமல்படுத்த முடிவெடுக்கப்பட்டுள்ளது.

இதன் தொடர்பாக 12வது நிதிக் குழு அளித்த நிதி மூலமாக 1,128 எண்ணிக்கை வீட்டுவசதி குடியிருப்புகளை மொத்த மதிப்பீட்டுத் தொகை ரூ.16.56 கோடியில் அமைக்க விரிவான திட்ட அறிக்கை தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தால் தயாரிக்கப்பட்டுள்ளது. இவ்வாரியம் 19.01.2007 அன்று சேலம் மாநகராட்சியால் அனுப்பப்பட்ட முன் மொழிவுகளுக்கு ஒப்புதல் அளித்துள்ளது.

இப்புதிய தார்சு தளமிட்ட குடியிருப்புகளை அமைக்க ஆகும் மொத்தச் செலவினம் ரூ.16.55 கோடி தொகையை அரசே ஏற்றுக் கொண்டுள்ளது. இக்குடியிருப்பு மனை ஒன்று அமைக்க சுமார் ரூ. 1.74 லட்சம் செலவாகும்.

இத்திட்டத்திற்காக குடியிருப்பு ஒன்றுக்கு வைப்புத் தொகையாக ரூ.1,070/–ம், மாதாந்திரத் தவணையாக ரூ.250/– வீதம் 20 வருடஙகளுக்கு சேலம் மாநகராட்சி செலுத்தி வரும். 20 வருடஙகளுக்குப் பின்னர் இத்திட்டத்தை மாநகராட்சியே ஏற்றுக் கொள்ளும்.

## நவீன திடக் கழிவு மேலாண்மைத்திட்டம்

நவீன திடக்கழிவு மேலாண்மை வளாகம் மற்றும் நவீன மாற்றியனுப்பும் நிலையஙகள் அமைத்தல். இந்திய உச்ச நீதி மன்றம், சுற்றுச் சூழல்துறை, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகல் துறை, மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் ஆகியவற்றின் உத்திரவுகளின்படியும் திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2000ன்படியும் மாநகராட்சிப் பகுதியில் சேரும் திடக்கழிவுகளைப் பாதுகாப்பாக அழித்திட வேண்டியுள்ளது.

இதற்கான நவீன விஞ்ஞான முறையிலான திடக்கழிவு மேலாண்மைக் களம் அமைக்க மாநகராட்சிக்குச் சொந்தமான போதுமான பரப்புள்ள நிலம் இல்லாததால் தக்க நிலம் பெற கடந்த பல்லாண்டுகளாக முயற்சிகள் மேற்கொண்டும் நிலம் கிடைக்கப்பெறவில்லை. அதனால் உரிய காலத்திற்குள் களம் அமைக்க முடியாமலும், மாநகரத்தில் சேரும் கழிவுகளை அப்புறப்படுத்த முடியாமலும் பெரும் இடர்ப்பாடு ஏற்பட்டுள்ளது. இச்சீர்கேட்டினைக் களைந்திட

**மாண்புமிகு தமிழக வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்**
சீரிய அக்கறையுடன் சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுடன் ஆய்வு மேற்கொண்டு செட்டிச்சாவடி, புல எண் 6ல் (பகுதி) உள்ள 150 ஏக்கர் பரப்பளவுள்ள அரசு புறம்போக்கு நிலத்தினை இத்திட்டத்திற்குத் தெரிவு செய்து வழஙகியுள்ளார்கள். இதற்கான நில உரிமை மாற்ற முன்மொழிவுகள் அரசினருக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

நடப்பாண்டிலேயே செட்டிச்சாவடி புல எண் 6ல்(பகுதி) உள்ள 150 ஏக்கர் நிலத்தில் ரூ.20.00 கோடி மதிப்பீட்டில் நவீன விஞ்ஞான முறையிலான திடக்கழிவு மேலாண்மைக்களமும், நகரத்தில் தற்போதுள்ள நான்கு திடக்கழிவுக் களஙகளையும் ரூ.5.00 கோடி மதிப்பீட்டில் நவீன மாற்றியனுப்பும் நிலையஙகளையும், மாநகராட்சியின் அனைத்து வாகனஙகளையும் நிறுத்தி வைக்கவும், பராமரிப்புச் செய்யவும், எருமாபாளையம் உரக்களப் பகுதியில் மத்திய வண்டிகள் நிறுத்துமிடம் மற்றும் பணிமனை ரூ.2.50 கோடி மதிப்பீட்டில் அமைக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## உத்தேசிக்கப்பட்டுள்ள திட்டங்கள்

### 1) ஜவகர்லால் நேரு தேசிய நகர மேம்படுத்துதல் திட்டம் (JNNURM)

இத்திட்டத்தின் கீழ்க்கண்ட பணிகளை எடுத்துச் செய்யப் பிரேரணைகள் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை, அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

| வ. எண் | திட்டங்கள் | மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | திடக்கழிவு மேலாண்மை | 2,607.00 |
| 2. | குடிநீர் வழங்கல் | 13,500.00 |
| 3. | சாலை மேம்பாடு | 3,043.00 |
| 4. | தெரு விளக்கு | 229.00 |
| 5. | வடிகால் | 1,321.00 |
| 6. | மத்திய பேருந்து நிலையம் | 538.00 |
| 7. | பூஙகா அபிவிருத்தி | 60.00 |
| 8. | இடுகாடு அபிவிருத்தி | 320.00 |
| 9. | ஜி.ஐ.எஸ் தகவல் திட்டம் | 150.00 |
| 10. | மின்னனு நிர்வாகம் | 124.00 |
| 11. | சுமையுந்து நிலையம் | 1,000.00 |
| 12. | அஙகாடிகள் | 1,000.00 |
| 13. | போஸ்மைதானம் நேரு கலையரஙகம் அபிவிருத்தி | 200.00 |
| 14. | போக்குவரத்து அபிவிருத்தி மற்றும் வெளிச்சுற்றுச் சாலை | 5,710.00 |
| 15. | போக்குவரத்து அபிவிருத்தி சாலை மேம்பாலஙகள் | 11,000.00 |
| 16. | நிர்வாக அலுவலகஙகள் | 10,000.00 |
| 17. | வரி வசூல் கணிணி மையஙகள் | 300.00 |
| 18. | பள்ளிக் கட்டிடஙகள் | 1,000.00 |
| 19. | தாய்சேய் நல விடுதிகள் | 1,000.00 |
| 20. | மரபு சாரா எரிசக்தி திட்டம் (மின் காற்றாலை) | 500.00 |
| 21. | வீட்டு வசதி வாரிய குடியிருப்புகளை மறு சீரமைத்தல் | 5,000.00 |
| 22. | நெடுஞ்சாலை போக்குவரத்து சீரமைப்பு திட்டஙகள் | 10,000.00 |
| 23. | புதிய விளையாட்டு அரஙகம் அமைத்தல் | 1,000.00 |
| 24. | கால்நடை பராமரிப்பு (சிறப்பு கால்நடை மருத்துவனை) | 1,000.00 |
| 25. | மாநகரத்திற்குட்பட்ட மலைப்பகுதி வளஙகளை மேம்படுத்துதல் | 1,000.00 |

### 2) சுற்றுலா தலமாக்குதல்

சுற்றுலா தலமாக்குதல் திட்டத்தின் கீழ் பள்ளப்பட்டி ஏரி, கன்னஙகுறிச்சி ஏரி மற்றும் அம்மாபேட்டை ஏரி ஆகிய ஏரிகளை மேம்படுத்த திட்டம் தயாரிக்கப்பட உள்ளது.

# நல வாழ்வுத் துறை

## மருத்துவ சேவைகள்

இம்மாநகராட்சியில் செயல்பட்டு வரும் 7 நகர் நல மையங்கள் மற்றும் 9 நகர் நல மருந்தகங்கள் மூலம் 2006ம் ஆண்டில் 1,30,100 நபர்களுக்கு அலோபதி சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. இந்திய முறை மருத்துவத்தில் சித்தா, ஆயுர்வேதம் மற்றும் யுனானி மருந்தகங்கள் மூலம் 21,100 நபர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. மாநகரில் சிக்கன் குன்யா நோய் பாதிப்பு ஏற்பட்ட போது பொதுமக்களின் நலன் கருதி அனைத்துப் பகுதிகளிலும் 1,535 சிறப்பு மருத்துவ முகாம்கள் அமைக்கப்பட்டு 1,24,350 நபர்களுக்கு பரிசோதனை செய்யப்பட்டு 3,712 நபர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. இதற்காக ரூ.4.00 லட்சத்திற்கு மருந்துகள் வாஙகி செலவிடப்பட்டது. கடந்த ஆண்டில் ரூ 8.00 இலட்சத்திற்கு தமிழ்நாடு மருத்துவ சேவைக் கழகம் மூலமாக மருந்துகள் வாஙகப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் சுமார் 5 லட்சம் நபர்களுக்கு சிகிச்சை அளிக்கவும் அதற்காக ரூ.30.00 லட்சத்திற்கு மருந்துகள் வாஙகவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## தாய்சேய் நலம்

இம்மாநகராட்சி பகுதிகளில் செயல்பட்டு வரும் 9 தாய் சேய் நல மையங்கள் மூலம் கர்ப்பிணி தாய்மார்களுக்கு பரிசோதனைகள் செய்யப்பட்டு 4,500 பிரசவங்கள் நடைபெற்றது. 600 கர்ப்பிணி தாய்மார்களுக்கு ஸ்கேன் பரிசோதனை செய்யப்பட்டுள்ளது. நடப்பாண்டில் பதிவு செய்யப்படும் அனைத்து கர்ப்பிணி தாய்மார்களுக்கும் ஸ்கேன் பரிசோதனை, இரத்தம் மற்றும் சிறுநீர் பரிசோதனை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. ரூ. 10.00 லட்சம் செலவில் புதியதாக 2 ஸ்கேன் மெஷின்கள் வாஙகவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பிரசவங்கள் சிறப்பான முறையில் நடைபெறுவதற்காக நடப்பாண்டில் ரூ. 50.00 இலட்சம் செலவில் பிரசவக் கட்டில்கள், உபகரணஙகள், கட்டில்கள், படுக்கைகள் போன்ற இதர தளவாடஙகளும் வாஙக உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**<u>குடும்ப நலத் திட்டம்</u>**

இம்மாநகராட்சியில் மொத்தம் உள்ள தம்பதிகளில் 2006ம் ஆண்டில் குடும்ப கட்டுப்பாடு அறுவை சிகிச்சை 3,500 பேருக்கு செய்யப்பட்டுள்ளது. இந்த ஆண்டில் 5000 பேருக்கு குடும்பக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சை செய்ய குறியீடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மாநகராட்சி மருத்துவமனைகளில் தற்காலிக கருத்தடை முறைகளான காப்பர் 'டி', கருத்தடை மாத்திரைகள் மற்றும் ஆணுறை இலவசமாக வழுங்கவும், நடப்பு நிதி ஆண்டில் 4,500 தாய்மார்களுக்கு காப்பர் 'டி' மற்றும் மாத்திரைகள் வழுங்கவும் குறியீடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

**<u>இரத்த தான முகாம்</u>**

மாநகராட்சி சார்பில் 4 இரத்த தான முகாம்கள் நடத்தப்பட்டு அரசு பொது மருத்துவமனைக்கு இந்த ஆண்டில் 164 யூனிட் இரத்தம் வழுங்கப்பட்டுள்ளது. இரத்த தான முகாம்கள் தொடர்ந்து நடத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கான நிதியாக ரூ. 20,000/–, தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாட்டுச் சங்கம், சென்னை–யிலிருந்து பெறப்பட்டு முகாம்கள் நடத்தப்படுகிறது.

**<u>எச்.ஐ.வி. பரிசோதனை முகாம் (ICTC)</u>**

ஒருங்கிணைந்த ஆலோசனை மற்றும் பரிசோதனை மையம் 5 இடங்களில் அமைக்கப்பட்டு பரிசோதனை, ஆலோசனை மற்றும் தொடர் சிகிச்சை வழுங்கப்பட்டு வருகிறது. ரூ.2.50 லட்சம் செலவில் TANSAC நிதி உதவியுடன் ICTC மையங்களின் அடிப்படை வசதிகளை மேம்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

TANSAC நிதி உதவியுடன் நகரின் 5 முக்கிய இடங்களில் HIV / AIDS ஆட்கொல்லி நோய் தடுப்பு விழிப்புணர்வு விளம்பரத்திற்காக ரூ. 2,75,000 மதிப்பில் ஒளிரும் விளம்பரப் பலகைகள் வைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**<u>தீவிர போலியோ சொட்டு மருந்து முகாம்</u>**

போலியோ நோயை ஒழிக்கும் பொருட்டு தேசிய அளவில் வருடத்திற்கு இரண்டு தவணை போலியோ சொட்டு மருந்து வழுங்கப்படுகிறது. கடந்த ஆண்டு 5 வயதிற்குட்பட்ட 83,400 குழந்தைகளுக்கு வழுங்கப்பட்டது. இந்த ஆண்டு 85,000 குழந்தைகளுக்கு சொட்டு

மருந்து வழஙகத் திட்டமிடப்பட்டுள்ளது. சேலம் மாநகராட்சியில் **1998** ஆம் ஆண்டு முதல் போலியோ நோய் முற்றிலுமாக கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

**<u>பள்ளி மாணவர் நலம்</u>**

மாநகரில் உள்ள அனைத்துப் பள்ளி குழந்தைகளும் பயன் பெறும் வகையில் அனைத்து மாணவ, மாணவிகளுக்கும் முழு உடல் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு, தேவையான மருந்துகள்,தடுப்பூசிகள், வைட்டமின் 'A' திரவம் கொடுத்தல், மேல் சிகிச்சைக்காக பரிந்துரைகள் போன்றவை தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதற்காக ரூ. **70,000/–** க்கான மருந்து பொருட்கள் ஒவ்வொரு வருடமும் பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து துறையில் இருந்து பெறப்பட்டு பள்ளி மாணவர் நலத்திட்டம் சிறப்பாக நடத்தப்படுகிறது. மேலும் கூடுதலாகத் தேவைப்படும் மருந்துகள் மாநகராட்சி நகர் நல மையஙகலிருந்து வழஙகப்பட்டு வருகிறது.

**<u>வரும் முன் காப்போம் திட்டம்</u>:–**

**மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின்**

**வரும் முன் காப்போம் திட்டத்தில்** சேலம் மாவட்டத்திற்கான முதல் முகாம் **மாண்புமிகு தமிழக வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களால் 31.12.2006** அன்று மாநகராட்சி காமராஜர் மகளிர் மேல்நிலைப் பள்ளி, மணக்காடு, சேலம் 7ல் துவக்கி வைக்கப்பட்டு சிறப்பாக நடத்தப்பட்டது. இம்முகாமில் **1,569** நபர்கள் பயன்பெற்றனர். தொடர்ந்து இத்திட்டத்தின் கீழ் **24** முகாம்கள் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. இச்சிறப்பு முகாம்களில் சிறப்பு பரிசோதனைகளாக, இரத்தத்தில் சர்க்கரை, உப்பு, கொழுப்பு, ஹீமோகுளோபின், எச்.ஐ.வி, TB பரிசோதிக்கவும், ஸ்கேன் மற்றும் இ.சி.ஜி. எடுக்கவும், வசதிகள் செய்யப்பட்டு உடனடியாக இலவச சிகிச்சையும் வழஙகப்படுகிறது. தேவைப்படும் நபர்களுக்கு பரிசோதனை செய்து அறுவை சிகிச்சை, கண்புரை நீக்குதல், புற்று நோய் சிகிச்சை ஆகியவற்றிற்கு வேண்டி பரிந்துரை செய்து அனுப்பவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பரிந்துரைக்கப்படும் அனைத்து நபர்களுக்கும் அரசு மோகன் குமாரமஙகலம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் தொடர் சிகிச்சை அளிக்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**<u>டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு உதவித்திட்டம்</u>:–**

தேசிய மகப்பேறு நிதி உதவித் திட்டத்தின் கீழ் ஏழை கர்ப்பிணி தாய்மார்களுக்கு முதல் இரண்டு பிரசவஙகளுக்கு தலா ரூ. 500/– வீதம் மட்டும் இது நாள் வரை வழஙகப்பட்டு வந்தது.

**மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால்,**

தற்போது, ஏழை கர்ப்பிணி தாய்மார்களுக்கு முதல் இரண்டு கர்ப்பத்திற்கு நிதி உதவியாக ரூ.6,000 வழஙகப்படுகிறது. இது பிரசவத்திற்கு முன் 3 மாதஙகளுக்கும், பிரசவத்திற்குபின் 3 மாதஙகளுக்கும் ஆக மொத்தம் ரூ. 6,000 முறையே ரூ. 1,000 வீதம் ஆறு தவணைகளாக வழஙகப்படுகிறது. இத்தொகை ஏழை தாய்மார்களின் பொருளாதார சுமையைக் குறைக்கவும், தேவையான ஓய்வெடுக்கவும், குழந்தையை நல்ல முறையில் பராமரிக்கவும் உதவிடும் நோக்கில் 15.9.2006 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன் மூலம் சேலம் மாநகராட்சிப் பகுதியில் உள்ள 2,762 ஏழை கர்ப்பிணிகளுக்கு ரூ.81,16,000 வழஙகப்பட்டுள்ளது. மேலும் வரும் நிதி ஆண்டில் 3,000 கர்ப்பிணிகள் பயனடையும் வகையில் நிதி பெறப்பட்டு வழஙக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**<u>தடுப்பூசிப் பணிகள்</u>:–**

கர்ப்பிணித் தாய்மார்கள் மற்றும் 5 வயது வரையுள்ள அனைத்து குழந்தைகளுக்கும் உயிர்கொல்லி நோய்களான கக்குவான், இருமல், இரணஜன்னி, தட்டம்மை மற்றும் காசநோய்களுக்கு தடுப்பூசிகள் இலவசமாக வழஙகப்பட்டு வருகிறது. வருடத்திற்கு 6,000 குழந்தைகளுக்கு தடுப்பு மருந்துகள் வழஙகப்பட்டு வருகிறது.

**<u>பிறப்பு, இறப்பு புள்ளி விவரம்</u>**

சேலம் மாநகராட்சிப் பகுதிகளில் கடந்த 2006ம் ஆண்டில் 25,989 பிறப்புகளும், 6,451 இறப்புகளும் நிகழ்ந்துள்ளது. மேலும் பிறப்பு இறப்பு பதிவுகள் அனைத்தும் முறையாக பதிவு செய்யப்பட்டு உடனடியாக சான்றிதழ்கள் வழஙகவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**<u>உணவு கலப்பட தடுப்புச் சட்டம்</u>**

உணவு கலப்பட தடுப்புச் சட்டத்தின் கீழ் இம்மாநகராட்சியில் உள்ள அனைத்து பகுதிகளிலும் பொது மக்கள் தினசரி பயன்படுத்தக் கூடிய உணவுப் பொருட்களில் ஏதேனும் கலப்படம் உள்ளதா என கண்டறிய இம்மாநகராட்சியில் பணிபுரிந்து வரும் 10 உணவு

ஆய்வாளர்கள் மூலம் சுமார் 500 மாதிரிகள் அவ்வப்போது எடுக்கப்பட்டு அதனை பரிசோதனைக்கு உட்படுத்தி, அதில் கலப்படம் என தெரியவந்தால் சம்பந்தப்பட்ட நபர்கள் மீது பொது சுகாதாரம் மற்றும் உணவு கலப்பட தடைச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**<u>துப்புரவு பணியாளர் சிறப்பு பாதுகாப்பு சாதனங்கள்</u>**

மாநகராட்சியில் பணிபுரியும் துப்புரவு பணியாளர்களுக்கு பாதாள சாக்கடை மற்றும் நச்சுத்தடை தொட்டி சுத்தம் செய்யும் போது உயிர் காக்க பயன்படுத்தப்படும் சிறப்பு சாதனங்களான முகம் முழுவதும் மூடக்கூடிய முக கவசம் மற்றும் ரப்பர் கை உறைகள் 60 எண்ணிக்கை வாங்கி வழங்கிட திட்டமிடப்பட்டுள்ளது. பாதுகாப்பு கவசம் ஒன்றின் விலை ரூ.7,000 வீதம் 60 எண்ணிக்கைக்கு ரூ. 4,20,000 /– செலவு செய்யப்பட உள்ளது.

**<u>மலேரியா நோய் ஒழிப்புத் திட்டம்</u>**

இம்மாநகராட்சியில் செயல்பட்டு வரும் மலேரியா ஆய்வகம், தாய் சேய் நல மையஙகள் மற்றும் நகர் நல மையஙகளில் காய்ச்சல் கண்டவர்களுக்கு மலேரியா நோய்க்கான இரத்தத் தடவல்கள் எடுக்கப்பட்டு முழுமையாகச் சோதனை செய்யப்பட்டு, நோய் தாக்கம் கண்டவர்களுக்கு களப்பணியாளர்கள் மூலம் முழுமையான சிகிச்சை அளிக்கப்படுகின்றது.

கடந்த ஆண்டில் 20 கை புகை தெளிப்பான் மெஷின்கள் ரூ.8.00 லட்சத்தில் வாஙகி பயன்படுத்தப்பட்டு வருகிறது. தற்போது மேலும் ரூ.8.00 லட்சம் செலவில் ஆட்டோ வாகனஙகள் வாஙகி புகை தெளிப்பான் பணிகளுக்கு பயன்படுத்தி மாநகரின் அனைத்துப் பகுதிகளிலும் கொசுக்களைக் கட்டுப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

கடந்த ஆண்டில் மலேரியா நோய் ஒழிப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ள வாகனஙகள், புகை தெளிப்பான்கள், எரிபொருள் செலவினம் மற்றும் மருந்துகள் போன்றவற்றிக்கு ரூ.30.00 லட்சம் செலவிடப்பட்டுள்ளது. நடப்பாண்டில் கொசு ஒழிப்பு மருந்துகள் வாஙகவும், வாகனஙகளின் எரிபொருள் செலவினத்திற்காகவும் ரூ. 49.00 லட்சஙகள் ஆகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

**<u>துப்புரவுப் பணி</u>**

சேலம் மாநகரின் அனைத்துப் பகுதிகளிலும் தினசரி 1,389 துப்புரவு பணியாளர்கள் மூலம் துப்புரவுப் பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இம்மாநகராட்சி 4 மண்டலஙகளாகப் பிரிக்கப்பட்டு மண்டல வாரியாக துப்புரவு பணியாளர்களின் துப்புரவுப் பணியினை மேற்பார்வையிட 60 துப்புரவுப்பணி மேற்பார்வையாளர்களால் தினசரி காலை மற்றும் மாலை என இருவேளைகளிலும் வருகைப் பதிவேடு பராமரிக்கப்பட்டு பணி தொய்வில்லாமல் நடைபெற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும் 24 துப்புரவு ஆய்வாளர்கள் மூலம் அனைத்து துப்புரவுப் பணிகளும் மேற்பார்வையிடப்படுகிறது. தினசரி 335 மெட்ரிக் டன் குப்பை உற்பத்தி ஆவதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. வீடுகள், கடைகள் மற்றும் தெருக்களில் சேரும் திடக்கழிவுகளை தினசரி தோற்ற நிலையிலேயே மக்கும் மற்றும் மக்கா வகைகளாகப் பிரித்து, பச்சை மற்றும் சிவப்பு கலன்களில் சேகரிக்கப்பட்டு, இதனை மாநகராட்சி லாரிகள் மற்றும் டிராக்டர்கள் ஆகிய வாகனஙகள் மூலம் உரக்கிடஙகிற்கு அனுப்பி வைக்கப்படுகிறது. மேலும் தெருக்களில் உள்ள கழிவு நீர் வாய்க்கால்களில் அடைப்புகளை நீக்கி குப்பை, சேறு போன்றவற்றைச் சுத்தம் செய்து கழிவு நீர் தேஙகாமல் சீராக வெளியேறும் வண்ணம் பணிகள் நடைபெற்று வருகிறது.

பொதுமக்கள் ஒத்துழைப்புடன் பல்வேறு விழிப்புணர்வு கூட்டஙகள் நடத்தப்பட்டு சேலம் மாநகரை குப்பையில்லா மாநகரமாக மாற்றி **“எழில்மிகு சேலம்”** என்ற நிலையை அடைய அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

முதல் கட்டமாக 2007–2008 நிதியாண்டில் சேலம் மாநகராட்சியில் உள்ள 21 கோட்டஙகளில் துப்புரவுப் பணியினை தனியாரிடம் ஒப்படைத்து துப்புரவுப் பணிகளை மேற்கொள்ள உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**<u>பிராணிகள் வதை தடுப்புச் சட்டம் – நாய்களுக்கு கருத்தடை அறுவை சிகிச்சை மேற்கொள்ளுதல்</u>**

கடந்த சில மாதஙகளாக நாய்களின் தொல்லை அதிகரித்து வருகிறது. இதனைக் கட்டுப்படுத்த சேலம் மாநகராட்சிப் பகுதிகளில் தெருவில் சுற்றித்திரியும் நாய்கள் 5,925க்கும், வீடுகளில் வளர்க்கப்படும் நாய்கள் 2,540க்கும் ஆக மொத்தம் 8,,465 நாய்களுக்கு அறுவை சிகிச்சை செய்ய நாய் ஒன்றுக்கு ரூ. 445/– வீதம் ரூ. 26,36,625 ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. எனவே மாநகரில் நாய்களுக்கு பாதுகாப்பான முறையில் கருத்தடை அறுவை சிகிச்சை

மேற்கொண்டு எண்ணிக்கையைக் கட்டுப்படுத்திட அனைத்து நாய்களுக்கும் பாதுகாப்பான முறையில் கருத்தடை அறுவை சிகிச்சை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

## சொர்ண ஜெயந்தி திட்டம்

சேலம் மாநகராட்சியில் சொர்ண ஜெயந்தித் திட்டமானது **1998**ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம் நகர்புறப் பகுதிகளில் வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழும் குடும்பங்களின் பொருளாதார நிலையை மேம்படுத்திட பல நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றது. இத்திட்டத்திற்காக இந்திய அரசு மற்றும் தமிழக அரசிடமிருந்து மான்யமாக நிதி பெறப்பட்டு வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் குடும்பங்களுக்கு வங்கிகள் மூலம் மானியத்துடன் கூடிய நேரடிக்கடன் வழங்கப்பட்டு பயனடைந்து வருகின்றனர். இத்திட்டத்தினை செயல்படுத்த சமுதாய அமைப்பாளர்கள் மூலம் **1998** ஆம் ஆண்டு வறுமைக் கோட்டிற்கு கீழே வாழும் குடும்பங்களின் எண்ணிக்கை கணக்கெடுக்கப்பட்டு **68,714** குடும்பங்களுக்கு தொடர்ந்து நிதி உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றது. தற்போது ஏற்பட்டுள்ள மாற்றங்களைக் கருத்தில் கொண்டு அரசு வழிகாட்டுதல்படி புதிய கணக்கெடுக்கும் பணிகள் துவக்கப்பட்டு பணிகள் முடிவடையும் நிலையில் உள்ளது. புதிய கணக்கெடுப்பின்படி வறுமைக் கோட்டிற்கு கீழே வாழும் குடும்பங்களின் வாழ்க்கைத் தரம் உயரவும் பொருளாதார முன்னேற்றம் ஏற்படவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இத்திட்டத்தின் கீழ் சுயவேலைவாய்ப்புத் திட்டம், வேலைவாய்ப்பு பயிற்சிகள், பெண்களுக்கான வேலைவாய்ப்புத் திட்டம், சுயஉதவி குழுக்கள், சிக்கன நாணயச் சங்கங்களை தோற்றுவித்தல், மகளிர் மற்றும் குழந்தைகள் வளர்ச்சிக்கான திட்டங்கள் ஆகியவை செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

## நகர்புற சுய வேலை வாய்ப்புத் திட்டம்

இத்திட்டத்தின் கீழ் **315** பயனாளிகளுக்கு தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் **2006–2007**ஆம் ஆண்டில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இந்நிதியிலிருந்து **167** பயனாளிகளுக்கு ரூ.**40,63,333/–** கடனாகவும், ரூ.**6,09,500/–** **(15%)** மான்யமாகவும் வழங்கப்பட்டுள்ளது. மேலும் மீதமுள்ள **150** பயனாளிகளுக்கு **15**சதவீதம் மானியத்துடன் கடன்கள் வழங்கவும், சிறுதொழில் பயிற்சி வழங்கவும் நடவடிக்கையில் உள்ளது.

**<u>நகர்ப்புற வேலை வாய்ப்பு பயிற்சித் திட்டம்</u>**

இத்திட்டத்தின்கீழ் கீழ்க்கண்டுள்ள பயிற்சிகள் பயனாளிகள் பயனடையும் வகையில் அளிக்கப்பட்டு வருகிறது.

| | |
|---|---|
| கணினிப் பயிற்சி | 100 நபர்கள் |
| அழகுக் கலை பயிற்சி | 100 நபர்கள் |
| ஓட்டுநர் பயிற்சி | 40 நபர்கள் |
| தையல் பயிற்சி | 60 நபர்கள் |
| கைவினைப் பொருள்கள் பயிற்சி | 15 நபர்கள் |
| கேட்டரிங பயிற்சி | 20 நபர்கள் |
| செல்போன் பயிற்சி | 20 நபர்கள் |
| மொத்தம் பயிற்சி பெற்றோர் | 355 நபர்கள் |

மேலும் 324 பயனாளிகளுக்கு இலவசப் பயிற்சி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இப்பயிற்சிக்கான தொகை அரசு மான்யமாக வழஙகப்பட்டு வருகிறது.

**<u>நகர்ப்புற பெண்கள் வேலை வாய்ப்புத்திட்டம்</u>**

இத்திட்டத்தின் கீழ் இவ்வாண்டில் 78 குழுக்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதில் 26 குழுக்களுக்கு ரூ. 39,25,270/– கடன் தொகையாகவும், ரூ. 19.62.635/–ஐ 50% மான்யமாகவும் வழஙகப்பட்டுள்ளது. மீதமுள்ள 52 குழுக்களுக்கு கடன் தொகை மற்றும் மான்யத் தொகை வழஙகவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

<u>**நகர்புற மகளிர் மற்றும் சிக்கன நாணயச் சஙகஙகள்**</u>

இத்திட்டத்தில் 1,324 சுய உதவிக் குழுக்கள் செயல்பட்டு வருகிறது. இதுவரை 256 குழுக்களுக்கு சுழல்நிதி ரூ.48.64 இலட்சம் வழஙகப்பட்டுள்ளது. இவ்வாண்டில் பெறப்பட்டுள்ள நிதியைக் கொண்டு 74 குழுக்களுக்கு சுழல்நிதி வழஙக நடவடிக்கையில் உள்ளது. மீதமுள்ள 994 குழுக்களுக்கு 2007–2008 ஆம் ஆண்டில் பெறப்படும் நிதியில் இருந்து வழஙக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்** மற்றும் **மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்** ஆகியோர் தலைமையில் சேலம் நேரு கலையரஙகில் 7.9.2006 ஆம் தேதியன்று நடைபெற்ற விழாவில் சேலம் மாநகராட்சியின் சொர்ண ஜெயந்தி திட்டத்தில் நகர்ப்புற சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் தனிநபர் கடனுதவி பெற 204 நபர்களுக்கு 15 % மான்யத் தொகையான ரூ.8,28,375/–க்குரிய காசோலை வழஙகப்பட்டது. மேலும் நகர்ப்புற பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் 26 குழுக்களுக்கு கடனுதவி பெற 50% மான்யத் தொகை ரூ.19,62,635/– க்கான காசோலைகள் வழஙகப்பட்டன. மேலும் 101 குழுக்களுக்கு சுழல்நிதித் தொகைக்குரிய ரூ.11,04,000/–க்கான காசோலைகளும் வழஙகப்பட்டன.

சொர்ண ஜெயந்தி திட்டத்தின் கீழ் அனைத்துப் பணிகளையும் சிறப்பாக செயல்படுத்தும் விதமாக சமுதாய அமைப்பாளர்கள் திறம்பட பணியாற்றிட இடவசதி ஏற்படுத்தும் நோக்கத்தில் சமுதாய உள் கட்டமைப்பு நிதியிலிருந்து ரூ.5.00 லட்சம் செலவில் அறிக்கை ஆண்டில் புதிய கட்டிடம் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## சொர்ண ஜெயந்தி திட்டம் 2007–2008 ஆண்டில் மதிப்பீடு விபரம்

### 1. நகர்ப்புற மக்களின் தனி நபர் கடன்

| பயனாளிகளின் எண்ணிக்கை | கடன் தொகை | மானியத் தொகை 15 % |
|---|---|---|
| 600 | ரூ.3,00,00,000 | ரூ.45,00,000 |

### 2. நகர்ப்புற வேலை வாய்ப்பு பயிற்சித் திட்டம்

| பயனாளிகளின் எண்ணிக்கை | பயிற்சிக்கான தொகை |
|---|---|
| 1500 | ரூ.30,00,000 |

### 3. நகர்ப்புற பெண்கள் மற்றும் குழந்தைகள் வளர்ச்சித் திட்டம்

| குழுக்களின் எண்ணிக்கை | கடன் தொகை | மானியத் தொகை 50 % |
|---|---|---|
| 150 | ரூ.3,75,00,000 | ரூ.1,87,50,000 |

### 4. நகர்ப்புற மகளிர் மற்றும் சிக்கன நாணயச்சஙகஙகள்

| குழுக்களின் எண்ணிக்கை | உறுப்பினர் எண்ணிக்கை | மானியத் தொகை |
|---|---|---|
| 750 | 14250 | ரூ.1,42,50,000 |

சேலம் மாநகர மக்களுக்காக பேரன்புடன் பல்வேறு அரும்பெரும் திட்டங்களை
வாரி வழங்கி வரும் தமிழகத்தின்
உதய சூரியன், தமிழினத்தின் தனிப்பெருந்தலைவர்

**மாண்புமிகு தமிழக முதல்வர்**
**டாக்டர் கலைஞர் அவர்களுக்கும்,**

உள்ளாட்சிகளின் உயர்வையே உயிர் மூச்சாகக் கொண்டு தமிழகத்தின் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் சென்று நிறைகண்டு, குறையறிந்து, கோரிக்கை வைக்கும் முன்னரே உள் கட்டமைப்புத் திட்டங்களை கனிவுடன் வழங்குகின்ற

**மாண்புமிகு தமிழக உள்ளாட்சித் துறை அமைச்சர்**

**திரு மு.க. ஸ்டாலின் அவர்களுக்கும்,**

''சுழன்றும்ஏர்ப் பின்ன துலகம் அதனால் உழந்தும் உழவே தலை'' என்னும் குறளின்படி நம் தமிழ்நாட்டின் உயிர்நாடியான விவசாயத் துறைக்குப் பொறுப்பேற்று ஓய்விலாது உழைக்கும் நேரத்திலும், சேலம் மாநகருக்கென பல்வேறு திட்டங்களை உருவாக்கி துவக்கம் முதல் இறுதிவரை கண்காணித்து நடைமுறைப்படுத்தும்

**மாண்புமிகு தமிழக வேளாண்மைத் துறை அமைச்சர்**

**வீரபாண்டி திரு எஸ். ஆறுமுகம் அவர்களுக்கும்,**

இச்சீரிய முயற்சிகளுக்கெல்லாம் துணை நின்று நமக்காக பாடுபடும்

சேலம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கும்,
சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் அவர்களுக்கும்,
வீரபாண்டி சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்கும்,
பனமரத்துப்பட்டி சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்கும்,
சேலம் 1 சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்கும்,

சேலம் மாநகராட்சியில் சிறந்த முறையில் பொதுமக்களுக்கு சேவை செய்ய
உறுதுணையாக இருந்து வரும்

வணக்கத்திற்குரிய துணை மேயர் அவர்களுக்கும்,
மாநகராட்சி ஆணையாளர் அவர்களுக்கும்,

மாநகராட்சி மன்ற ஆளும் கட்சி தலைவர் அவர்களுக்கும்,
மாநகராட்சி மன்ற எதிர்கட்சி தலைவர் அவர்களுக்கும்,
அனைத்து மண்டல குழுத் தலைவர்கள் அவர்களுக்கும்,
அனைத்து மன்ற உறுப்பினர்களுக்கும்,
மாநகராட்சியின் அனைத்துத் துறை தலைவர்களுக்கும்,
மாநகராட்சியின் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கும்,
மாநகர காவல்துறையினர் மற்றும் மாவட்ட காவல்துறையினருக்கும்
அனைத்து அரசு துறையினருக்கும்,
பத்திரிக்கையாளர்கள் மற்றும் தொலைக்காட்சியினருக்கும்,
எனது உளமார்ந்த நன்றியினை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

**"அரியவற்று ளெல்லாம் அரிதே பெரியாரைப்**
**பேணித் தமராக் கொளல்"**

பெரியவர்களைப் போற்றிப் பாராட்டி அவர்களுடன் உறவாடுதல் எல்லா பேறுகளையும் விடப் பெரும் பேறாகும் எனும் வள்ளுவரின் கூற்றுப்படி சேலம் மாநகராட்சியின் அனைத்து வளர்ச்சிப் பணிகளுக்கும் உஙகள் அனைவரின் ஒத்துழைப்பையும் வேண்டி,

எனக்கு இந்த வாய்ப்பை வழஙகிய

**மாண்புமிகு தமிழக முதல்வர்**

**டாக்டர் கலைஞர் அவர்களுக்கும்,**

**மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர்**

**திரு மு.க. ஸ்டாலின் அவர்களுக்கும்,**

**மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்**

**வீரபாண்டி திரு எஸ். ஆறுமுகம் அவர்களுக்கும்,**

மீண்டும் எனது நெஞ்சார்ந்த நன்றியினைப் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி, வணக்கம்.

சேலம் – 1.
27.2.2007

**ஜெ. ரேகா பிரியதர்சினி**
**மேயர்**
**சேலம் மாநகராட்சி.**